பொன்னி



25.3.4

5

அணா



பொன்னி

மாதம் இருமுறை

ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன்

க பொருளடக்கம்

மலர் 3 இதழ் 4

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1980
பங்குனித் திங்கள் 12-ம் நாள்

விலை அணா 5
25—3—49

செய்திப் பாட்டு

மீண்டும் உலகப் போர்!

மேலைத் திசைதனிலே மேலான ராசாங்கம்
ஏழு கலந்தொன்றாய் இன்னுமொரு சண்டைசெய்ய
வாளைப் பதமாக்க வாஷிங்டன் மாநகரில்
ஓலை எழுதிடுமாம் என் கண்ணம்மா
ஒப்பந்தம் செய்திடுமாம்!

வருமாதம் ஏப்பிரலில் நாலாம்நாள் கூடி
உருவாகும் அந்த உடன்படிக்கை தன்னில்
பெருநாட்டார் ஏழ்வரும்போய்ப் பேனாவை நாட்டி
வருவார்பின் போர்ப்புகையால் என் கண்ணம்மா
வாடும் உலகடியோ!

சோவியத்து ரஷ்யாவைத் தோற்கடிக்க வேண்டுமென
ஆவி பிரிந்ததுபார்த் தங்கம் துடித்தவரும்
போய்விழுந்த குண்டால் பொசுங்கி வெந்தவரும்
கூவியழும் காட்சிதனை என் கண்ணம்மா
கொண்டுவரத் திட்டமிட்டார்!

தமைவெல்லும் வீறுடையார் தானிவ் வுலகில்
அமைந்திருக்க லாகாதென் றட்லாண்டிக் ஒப்பம்
அமெரிக்கர் செய்த அருஞ்சூழ்ச்சி தானே
அமைதியினைப் போக்கடிக்க என் கண்ணம்மா
ஐரோப்பாத் திட்டமடி!

போராடிப் போராடிப் போர்வெறியர் ஆட்டமிட
நீரோடுஞ் செய்ய நிலமுழுது வாழ்வாரோ
போரால் துயருறுவார்; போர்வெறியர் ஈதறியார்!
வீறப்புக் காரரெண்ணம் என் கண்ணம்மா
வீழும்நாள் எந்நாளோ?

— நாரா. நாச்சியப்பன்



வகுப்பு நீதி!

மதமென்றும், மதத்திற்குள் சாதியென்றும் பிரித்து, நாட்டைப் பாழ்படுத்தியவர்கள் இன்று அத்தீமையின் பயனை அனுபவிக்க வேண்டியது பொருத்தமேயாம். வர்ணாஸ்ரம தருமம் இந்நாட்டு மக்களிடையே புகுத்தப் பட்டு, பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டு, சாதிப் பிரிவுகள் 'நிரந்தரம்' பெற்றுவிட்டன. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற நீதி வழங்கிய நாட்டில் தான் தன்னலக்காரர்கள் இத்தகைய சூது நிறைந்த திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்து விட்டனர். சாதிப்பிரி வினையை வற்புறுத்தும் வகையில் பலமான பிரசாரம் நடைபெற்றிருக்கிறது. சாஸ்திரங்கள், புராணங்கள், கற் பனைகள், நீதிநூல்கள் இப்பேதத்தை நிலைநாட்டும் வகையில் தீட்டப்பட்டு மக்களிடையே பரப்பப்பட்டன. பார்ப்பனர்கள் முகத்தில் பிறந்தார்களென்றும், சூத்தி ரர்கள் காலில் பிறந்தார்களென்றும் எழுதிவைத்தார்கள். பார்ப்பனர்களுக்கு ஒரு நீதியும், மற்றோருக்கு வேறு நீதி யும் மனுநீதி வடிவில் உருவாக்கப்பட்டன. சாதியில் உயர்வு தாழ்வு அசைக்க முடியாதபடி இந்நாட்டில் வேரூன்றியிருப்பது உண்மையே!

இந்தத் திட்டம் அழிக்கப்படவேண்டும் என்பதில் யாருக்கும்வேறுபாடான கருத்தில்லை; இத்திட்டம்நிலைத் திருக்க வேண்டும் என்றெண்ணுவோரும் இந்நாட்டில் இல்லாமலில்லை. எனினும் நாட்டின் முற்போக்காளர்கள் சாதிப்பாகுபாடு, வர்ணாஸ்ரம நச்சுச் சுழல் அழிந் தொழிய வேண்டுமென்பதில் ஒன்றுபட்டு நிற்கிறார்கள்; அவர்கள் கூறும் வழிவகைகளில்தான் வேறுபாடு காணப் படுகிறது. சாதியமைப்பு காரணமாகச் சமுதாயத்தில் 'உயர்ந்த சாதியினர்' எல்லா வகையிலுமே மேல்நிலை யடைய நிறைய வாய்ப்புக்களிருந்தன; அதன் காரண

மாகக் 'கீழ்சாதியினர்' உயர்நிலையை எட்டிப்பார்க்கவும் முடியாதபடி தடைகளிருந்தன. இந்நிலையில் படித்தோரெல்லாம், பதவியிலிருப்போரெல்லாம் மேல்சாதியினராகவே இருப்பதில் வியப்பில்லை; கீழ் சாதி மக்கள் வெறும் உடலுழைப்பாளிகளாகவே, மேல் சாதியினரின் ஏவலாளர்களாகவே இருப்பதிலும் வியப்பொன்றுமில்லை. வெள்ளையர் ஆட்சியில்தான் ஓரளவு இந்தச் சாதி முறை ஆட்டங்காணத் தொடங்கிற்று என்று கூறினால் அது மிகையில்லை. பள்ளிகளில் எல்லாச் சாதியினரையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று அவர்கள் சட்டம் செய்தார்கள்; அவர்களுடைய 'நாட்டு முன்னேற்றத் திட்டங்கள்' மற்ற சாதியினருக்கும் சமசந்தர்ப்பத்தையளித்தன. குறிப்பாகப் புகைவண்டி வருகை சாதியொழிப்பிற்குக் கொடி உயர்த்தியது. இவ்வாறு படிப்படியாக மற்ற கீழ் சாதியினரும் படிப்பிற்கும் பதவிக்கும் பங்கு கேட்க முன் வந்தனர்.

ஒரே சாதியினரின் 'ஏகபோகமாக' இருந்த வந்த கல்வித் துறையும் அரசாங்க உத்தியோகத் துறையும் மற்ற சாதியினருக்கும் இடங்கொடுக்க வேண்டிய அவசியத்திற்குள்ளாயின; தலைமுறை தலைமுறையாகப் படித்துவந்தவர்களுக்கும், புதிதாய்ப் பள்ளியில் சேர்ந்து பயின்றவர்களுக்கும் கல்வித் தேர்ச்சியில் ஏற்றத் தாழ்வு இருப்பது இயற்கைதானே! அதன் பயனாக, கீழ் சாதி மக்கள் படித்துப் பட்டம் பெற்றும், 'தகுதி, திறமை' என்ற தடைக்கல்லின் மூலம் நிறுத்தப்பட்டு, உத்தியோகங்களுக்கு வரமுடியாதபடி தடுக்கப்பட்டனர் உயர்ந்த சாதியினர், தாழ்ந்த சாதியினரிடையே உத்தியோகத்துக்காக நிகழ்ந்த போராட்டத்தை நாட்டின் நலனில் கருத்துள்ளவர்கள் கவனித்து வந்தார்கள். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், உயர்ந்த சாதியினர்தான் அந்தப் போட்டியில் வெற்றி பெற்றதைக் கண்டனர்; கீழ்சாதி மக்கள் படித்தும் பதவிக்கு வரமுடியாத நிலையில் தவித்தனர்; இப்பொல்லாங்கைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காகத்தான் அரசினர் உத்தியோகங்களுக்கு "வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ" முறை வகுக்கப்பட்டது நாட்டு மக்கள் தொகையில் அந்தந்த சாதியினரின் எண்ணிக்கைக்கேற்பத்தான் உத்தியோகங்கள் வழங்கப்படும் என்ற சட்டம் நடைமுறைக்கு வந்தது. பள்ளிகளிலும் இதே சங்கடம் எழுந்தபோது, அதைத் தவிர்க்க இந்த முறை அங்கும் பயன்படுத்தப்பட்டது. இவ் வகுப்புவாரி முறையால் ஓரளவு எல்லா சாதி மக்களுக்கும் நீதி கிடைத்து

வருகிறது; இத்திட்டத்தையே இன்னும் முற்போக்கான முறையில் திருத்தியமைக்கவேண்டுமென்றும் உயர்ந்த சாதியினர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் வரை உத்தியோகமே வழங்கப்படக்கூடாதென்றும் முற்போக்காளர்கள் கூறி வருகின்றனர். இத்தகைய திட்டங்கள் அமுலுக்கு வரவேண்டுமென்று நாட்டின் பழங்குடி மக்கள் விரும்பியிருக்க, இம்முறையையே ஒழித்துக்கட்ட உறுதி கொண்டு 'சிலர்' முயற்சி செய்து வருவதுதான் நமக்கு வருத்தமாயிருக்கிறது.

"சாதியை ஒழித்துக்கட்ட எண்ணுபவர்கள், சாதிக்குச் சாதி வேறுபாடு காட்டி எப்படி உத்தியோகம் வழங்கலாம்? இப்படிச் செய்வதால் சாதி வேறுபாடு நிலைக்க வல்லவா வழி ஏற்படுகிறது?" என்றகூச்சல் இவ் வகுப்புவாரி முறை என்று அமுலுக்கு வந்ததோ அன்று முதல் எழுப்பப் பட்டுத்தான் வருகிறது. அதே போக்கில், அண்மையில் சென்னை சட்டசபையில் பேசிய திருமதி ருக்மணி லெட்சுமீபதி அவர்கள், இம்மந்திரி சபையைக் கண்டிப்பதற்கு வாய்ப்பாக இவ்வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் குறிப்பிட்டுச் சீறியிருக்கிறார்கள். பார்ப்பன குலத்தில் பிறந்ததற்காகப் பெருமைப்படும் அந்த அம்மையார் பார்ப்பனர்களுக்கு அரசாங்கம் தரும் 'இடைஞ்சல்களையும்' நாட்டில் கருஞ்சட்டையினர் அவர்கட்குத் தரும் 'இடைஞ்சல்களையும்' சுட்டிக்காட்டி வாதாடியிருக்கிறார்கள். உத்தியோகம்தான் மறுக்கப்படுகிறதென்றால் பள்ளிக்கூடத்திலுமா இவ் வேறுபாடு என்று பரிதாபப் படுகிறார்கள். அம்மையாரின் பேச்சில் 'சுயஜாதி அபிமானம்' காணப்படுகிற அளவு பொதுநல எண்ணம் இல்லையென்பதை, பதிலளித்த அமைச்சர் கோபால ரெட்டியார் அவர்களே குறிப்பாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். வகுப்புவாதம் தான்வகுப்புவாதத்தை வளர்க்கிறதென்றும், பிராமணர்களே இந்த வகுப்பு வாதத்திற்கு ஆதிகர்த்தாக்கள் என்றும், எல்லா மக்களும் சமநிலை எய்தும் வரை இந்த ஏற்பாடு நீடிக்கத்தான் வேண்டுமென்றும் ஆணித்தரமாக அவர் பதிலளித்திருப்பதை நாம் பாராட்டுகிறோம்; இந்திய சர்க்கார் ஏற்படுத்தியுள்ள திவாகர் கமிட்டிக்கு அளித்த முடிவிலும் இந்த வகுப்புநீதியை வற்புறுத்திச் சென்னை அமைச்சர் குழு தீர்மானித்திருப்பதும் வரவேற்கத் தக்கதொன்றாகும்.

உத்தியோகம் பெறுவதற்காகவும், பள்ளிகளில் இடம் பெறுவதற்காகவும் மட்டும் 'சாதி'யை விண்ணப்பங்களில் ஒழிக்க எண்ணும் நம் பார்ப்பன நண்பர்கள் சற்று சிந்தனை செய்யவேண்டும்; தாங்கள் ஏற்படுத்திவைத்த இத்தீங்கு தமக்கே வம்பாய் முடியுமென்று அவர்கள் கனவிலும் கருதி யிருக்கமாட்டார்கள்! 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்ற வள்ளுவர் வாக்கு நிறைவேறி வருகிறது. கலப்பு மணம் தான் சாதிகளை ஒழிக்க முடியும் என்றும் அவ்வாறு கலப்பு மணம் செய்பவர்களுக்கு உத்தியோகச் சலுகைகள் முதலியன தருவதற்குச் சென்னை அரசினர் ஆலோசிப்பதாகத் தெரிகிறது; இத்தகைய திட்டங்களுக்கு நாட்டில் ஆதரவு தேடும் பணியில் பார்ப்பனத் தோழர்கள் ஈடுபடுவர்களானால் தங்கள் முன்னோர்கள் செய்துவைத்த தீங்கிற்குக் கழுவாய் தேடுவதாகுமென்று கூறவிரும்புகிறோம்.

இரண்டு முனை



பார்ப்பனத் தோழர்கள் திராவிடக் கழகத்தாரிடம் ஒரு பக்கம் சமரசம் பேசுவதும், மற்றொரு பக்கம் கழகத்தை நசுக்க அடக்குமுறையை வீசும்படி அரசினருக்கு வேண்டுகோள் விடுப்பதுமாகத் தங்கள் நடவடிக்கைகளை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

காலமும் கருத்தும்

புதுக்கோட்டை நிலை

எத்தனை கூறியும் எவ்வகை விளக்கம் தந்தும் புதுக்கோட்டை 'அநாதைக்குழந்தையின்' நிலையை அடைந்து விட்டது. திருச்சி மாவட்டத்தில் புதுக்கோட்டையை இணைத்து விட்டார்கள்; புதுக்கோட்டையைத் தலைநகராக்க வேண்டுமென்ற யோசனை உருப்பெறவில்லை. 'தனி அரசு' என்ற முறையில் எல்லாத் துறைகளிலும் நன்கு வளர்ச்சியடைந்திருந்த புதுக்கோட்டை அப்படியே நீடித்திருக்க வேண்டுமென்றால் அதனுடைய முக்கியத்துவம் எவ்விதத்திலும் குறையக்கூடாது. ஒரு மாவட்டத்திற்குத் தலை நகராக விளங்கும் தகுதி புதுக்கோட்டைக்கிருக்கிறது. இராமநாதபுரம் தலைநகரமென்று ஒன்றின்றித் தவிக்கிறது. இத்தகைய சூழ்நிலையைவைத்துக்கொண்டு புதுக்கோட்டையைத் திருச்சியில் சேர்த்திருப்பது கண்டிக்கத்தக்கதாகும். புதுக்கோட்டை மக்களைத்தான் குறை சொல்ல வேண்டும். அவர்களிடம போதுமான அளவு கிளர்ச்சி இல்லை; உரிய அதிகாரிகளிடம் நிலையைவிளக்கத்தக்க 'பெரியவர்கள்' புதுக்கோட்டையில் இல்லை. இந்தக் குறைபாடுதான் புதுக்கோட்டையை அநாதைக் குழந்தை நிலைக்குக் கொண்டுவந்து விட்டது. இனிமேலும் சந்தர்ப்பங்கள் இல்லாமலில்லை. புதுக்கோட்டை மக்கள் ஒருமித்து முயன்றால் வெற்றி திண்ணமென்று கூற விரும்புகிறோம்.

கோவை மில்கள்

கோவை மில்களில் பஞ்சுக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறதென்றும், அதன் பயனாக வாரம் இரண்டு நாள் கட்டாய விடுமுறை தரப்பட்டு வருகிறதென்றும் செய்திகள் வருகின்றன. அந்த இரண்டு நாள் விடுமுறைக்கும் தொழிலாளர்களுக்குச் சம்பளம் தரப்படுவதில்லையாம். இந்நிலைமை வருமென முன் கூட்டியே அரசினரும் மில்காரர்களும் உணர்ந்திருக்க வேண்டும்; சென்னை சர்க்கார் போதிய முன்னேற்பாடு செய்து தேவையான பஞ்சை 'இறக்குமதி செய்து தந்திருக்க வேண்டும். இக்கவனக் குறைவு தொழிலாளர்கள் தலையில் விடிந்திருக்கிறது; இனியும் தாமதிக்காமல் பஞ்சு மில்களில் சேரும்படி செய்ய வேண்டியது அரசினரின் நீங்காக் கடமையாகும்.

வம்பு மடம்

— ஆண்டி —

மார்ச் மாதம் மாணவர்களுக்குச் சோதனை காலம்; என்ன திகைப்பாயிருக்கிறதா? அவர்கட்குத் தேர்வுகள் பெரும்பாலும் இம்மாதத்தில் தானே நடைபெறுகின்றன; அதைத்தான் குறிப்பிடுகிறேன். நம் சென்னை அமைச்சர்களுக்கும் இம்மாதம் தான் 'சோதனை காலம்.' இன்னும் ஒருவாரத்தில் தெரியும் இச்சோதனையில் ஓமந்தூரார் வெற்றி பெறுகிறாரா இல்லையா என்று? சட்டசபை உறுப்பினர்கள் என்ன நோக்கத்தில் இருக்கிறார்களோ பலரும் பல மாதிரியாகப் பேசிக் கொள்கிறார்கள். ஆனால் இந்தச் சட்டசபை அங்கத்தினர்களைத் தெரிந்தெடுத்தனுப்பிய பொதுமக்கள் ஓமந்தூரார் ஆட்சியைத் தான் விரும்புகிறார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை; அதன்படி பார்த்தால் சட்டசபை அங்கத்தினர்கள் பொது மக்களின் விருப்பத்தை நிறைவேற்றி வைக்க முற்படுவதுதான் பொருத்தமாகும். அப்படி நடைபெறாமல் 'சுயநலம்' அவர்களை ஆட்கொண்டுவிட்டால், அடுத்த பொதுத் தேர்தலை அவர்கள் மறந்து விடவேண்டியதுதான். "மஞ்சள் பெட்டியில் இனி ஓட்டுச் சேராது என்பதை அவர்கள் முன்பே தெரிந்து கொண்டுவிட்டார்கள்; அதனால் தான் 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்ற பழமொழிப்படி ஒவ்வொருவரும் மந்திரியாகி விட முயற்சிக்கிறார்கள்" என்று நண்பர்கள் கூறுவது என் காதில் விழுகிறது. என்றாலும் சட்டசபை அங்கத்தினர்களுக்கு நம் ஆலோசனையைச் சொல்லி வைக்கவே விரும்புகிறோம், பிறகு அவர்கள் பாடு! ஓமந்தூரார் பாடு!

இந்தக் காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தலில் சர்தார் படேல் தலையிட வேண்டிய சந்தர்ப்பம் வரலாமென்று கூடச் சிலர் சொல்கிறார்கள்; இவ்விஷயம் எப்படியாயினும் டில்லி பாராளுமன்றத்தில் அதிகாரிகளையும் நிர்வாகிகளையும் அடிக்கடி குறை கூறிக்கொண்டிருக்கும் அங்கத்தினர்களுக்குச் சிலபுத்திமதிகள் கூறியிருக்கிறார் படேல் "உங்களில் பலர் முதல் தடவையாக இச்சபைக்குவந்திருக்கிறீர்கள்; அடுத்த தடவை நீங்கள் திரும்ப இச்சபைக்கு வருவது இயலாமற் போகலாம்; ஆகவே பெரியவர்களோடு நீங்கள் பேச்சுப் போட்டிக்கு வரக்கூடாது" என்று அங்கே அவர் கூறிய "உபதேசம்" நம் சென்னை சட்டசபை அங்கத்தினர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் பயன்படுமென்று கருதுகிறோம்.

தமிழகத்தின் ஆஸ்தான கவிஞராக நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்; 'ஆஸ்தான கவிகள் ஏற்பாடு' தொடங்கும் போதே, தமிழுக்கு நாமக்கல்லார் என்பது தீர்மானமான செய்தி; எனவே இச்செய்தி யாருக்கும் வியப்பூட்டப் போவதில்லை; நாமக்கல்லார் பல்லாண்டு வாழ்ந்து, முதல் ஐந்தாண்டு மட்டுமல்ல அடுத்தடுத்த ஐந்தாண்டுகளிலும் ஆஸ்தான கவியாக விளங்கி, 'ராம ராஜ்யத்தின் சிறப்புகளை''ப் பாடி மகிழவேண்டுமென்று வாழ்த்துகிறோம். இந்த ஆஸ்தான கவி சாதனையை எண்ணும் போது கல்வியமைச்சரின் 'விடாமுயற்சி' நமக்கு நினைவுக்கு வருகிறது; இந்தியைக் கட்டாயம் படிக்கும்படி பள்ளிக்கூடங்களில் 'எத்தனை எதிர்ப்பிருந்தும்' வைத்தார்; அப்படி ஏற்பாடு செய்தும், இந்தியைப் படிக்காமலேயே பையன்கள் பத்துக்குப் பத்து மார்க் வாங்கிவிடுகிறார்கள். அகில இந்திய நிர்வாகத்தில் நம் மாகாண மக்கள் பின் தங்கி விடக்கூடாதே என்ற ஆசையில் கல்வியமைச்சர்

செய்யும் ஏற்பாட்டை இந்த இந்தி ஆசிரியர்கள் புரிந்துகொண்டால் தானே! இப்போது சினிமாத் தியேட்டர்காரர்களுக்கு அவர் ஒரு வேண்டு கோள் விடுத்திருக்கிறார்; நிறைய இந்திப் படங்களை வரவழைத்துக் காட்டி இந்திப் பயிற்சியைப் பரப்பும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்; அவர்களாவது கல்வியமைச்சரின் ஆசையை நிறைவேற்று கிறார்களாவென்று பொறுத்திருந்து பார்ப்போம்.

நம் அவினாசிலிங்கனார்க்கு இந்தக் 'கட்டாயம்' என்பதில் எவ்வளவு விருப்பமுண்டோ, அவ்வளவு வெறுப்பு 'இஷ்ட பாடம்' என்பதில் இருந்து வந்திருக்கிறதென்பது இப்போதுதான் தெரிகிறது. இனி எஸ். எஸ். எல். சி. வரை 'இஷ்ட பாடமே' கிடையாதாம். எல்லா மாணவர்களும் எல்லாப் பாடத்தையும் படிக்கவேண்டியதுதானாம்!

இந்திய சர்க்காரின் கொள்கை தேசிய மயமாக்குவதற்கு எதிரிடையாக இருந்தும், சென்னை சர்க்கார் துணிந்து 'தேசிய மயமாக்கும்' வேலையில் முற்பட்டு விடுகிறார்கள். கோவில்களையும் மடங்களையும் தேசிய மயமாக்கியதோடு அவர்கள் நிற்கவில்லை. பாரதியார் பாடல்களையும் தேசிய மயமாக்கியிருக்கிறார்கள்! இந்நேர்மையான ஏற்பாட்டுக்கு மன முவந்து உதவிய திரு. ஏவி. எம். தமிழ் மக்களின் பாராட்டுக்குரியவராகிறார்! அவர்தம் புகழ் வாழ்க!


'கார்டு முக்காலணா, கவர் இரண்டணா' ஏற்பாடு ஏப்ரலிலிருந்து அமுலுக்கு வரப்போகிறது. இந்த விலை யுயர்வை எதிர்த்து டில்லி பாராளு மன்றத்திலே பலரும் பேசியிருக்கிறார்கள்; அப்போது ஒரு அங்கத்தினர் "இனி எல்லாத் தபால்களும் விமானத்திலேயே அனுப்பப்படப் போவதால், காதலர்கள் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள். சாகுந்தலம், இயற்றிய காளிதாசன் இப்போதிருந்தால், இந்த ஏற்பாட்டிற்காகத் தபால் மந்திரி கித்வாயைக் கட்டித் தழுவிக்கொண்டிருப்பார். ஏனெனில் காதலர்கள் கடிதங்கட்காகக் காத்திருக்க வேண்டியதில்லையல்லவா?" என்றுபேசியிருக்கிறார். "காளிதாசர் இல்லாவிட்டாலென்ன, நம் சென்னை சர்க்கார் சமஸ்கிருத மொழிக்கென ஏற்படுத்தியிருக்கும் ஆஸ்தான கவியை நம் ஹனுமான் விமானத்தில் அனுப்பி, தபால் மந்திரியை ஆரத் தழுவி வரச் செய்தாலென்ன?" என்று இளங்காதலர் ஒருவர் சொல்லும் ஆலோசனையைச் சர்க்கார் கவனிப்பார்களென்று நம்புகிறோம்.

பெண்களைச் சரி சமமாக முன்காலத்தில்தான் நடத்துவதில்லையென்றால் இக்காலத்திலும் அவர்களின் உரிமைகள் புறக்கணிக்கப்படுகின்றதெனக் கேட்கும்போது "பெண்ணடிமை தீரும் நாள் எந்நாளோ?" என்று நாம் வருந்த வேண்டியிருக்கிறது. சென்னைச் சட்டசபையில் பத்துப் பெண்மணிகள் அங்கத்தினர்களாயிருக்கிறார்கள்; அவர்களின் உரிமைகள் கவனிக்கப்படுவதில்லையென்று பேகம் அமிருதீன் சபைத் தலைவரைக் குற்றம் சாட்டியிருக்கிறார்; அவர்கள் பேச எழுந்திருக்கும் போதெல்லாம் 'நேரம் ஆகிவிட்டது' என்று தலைவர் மணி அடித்துவிடுகிறாராம். "நாங்கள் பத்துப்பேர் இருந்தாலும் நாட்டுமக்களில் பாதிப் பேருக்கு நாங்கள் பிரதிநிதிகளல்லவா?" என்று அம்மையார் கேட்டிருக்கிறார்; "பாதிமட்டுமல்ல; நீங்கள் பெரும்பான்மையோருக்குப் பிரதிநிதிகள்" என்று அமைச்சர் கோபால் ரெட்டியார் குறிப்பிட்டு ஆண்களைவிடப் பெண்களே ஜனத்தொகையில் அதிகம் என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். இதற்கிடையில் சபைத் தலைவர் "நான்கு நாள் விவாதம் நடந்

தால் பெண்களுக்கு இரண்டு நாள் ஒதுக்க வேண்டுமா?'' என்று கேட்டு வைத்தார். அம்மையாருக்குப் போதும் போதுமென்றாகி விட்டது. "எங்களையும் ஆடவரைப்போல் நடத்தினால்போதும்'' என்று சொல்லிப் பெண்ணுரிமைப் பேச்சைத் தோழியர் பீகம் அமிருதீன் முடித்துக்கொண்டார்.

ஏதியோப்பியாவில் இந்திய ஆசிரியர்களை வேலைக்கு வைத்துக்கொள்ள விரும்புகிறார்களாம். இந்தச் செய்தி காதில் பட்டதுதான் தாமதம், இங்கே வேலை பார்க்கும் ஆசிரியர்களில் பெரும்பாலோர் தாங்கள் எதியோப்பியா செல்ல விரும்புவதாகக் குறிப்பிட்டு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்களாம். இப்படிச் சம்பளத்தை மட்டும் எண்ணி எல்லா ஆசிரியர்களும் எதியோப்பியா போய்விட்டால், நம் கல்வியமைச்சர்கள், ஆஸாத், அவினாசிலிங்கம் ஆகியோரின் திட்டங்கள் என்ன கதியாவது? இதனைச் சிறிதாவது யோசனை செய்யுமாறு நம் ஆசிரியர்களை வேண்டுகிறோம்.

நம் சென்னைச் சட்டசபையில் கண்ணியமான உடையைப் பற்றிக் கனம் கோபால் ரெட்டியார் வரையறை செய்திருக்கிறார்; வேட்டி, சொக்காய், தொப்பி இவைதாம் தென்னாட்டின் கண்ணியமான உடை என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதன்படி சொக்காய் போடாமல் சட்டசபைக்கு வருபவர்கள் 'கண்ணியமற்றவர்கள்' என்றாகிறது. பெண் அங்கத்தினர் ஒருவரும் சட்டை போடாமல் வருபவர்கள் 'பெண்களும் இங்கே இருக்கிறார்கள்' என்பதை எண்ணியாவது சட்டை போட்டுக்கொண்டு வரவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்; சட்டை போடாத அங்கத்தினர்கள் இந்தக் கருத்துரைகளைச் சட்டை செய்வார்களென்று நம்புகிறோம்.



பொதுத் தேர்தல் 1951-ம் ஆண்டில் நடைபெறுவது கூடச் சந்தேகமென்று சொல்லப்படுகிறது.

முருகானந்தக் கவிராயர்

இளமைப்பித்தன்

கொஞ்ச நாட்களாகவே திருவாளர் 'முருகானந்தம்' அவர்களுடைய 'மூளை' முறுக்கேறிப் போயிருந்தது. திடீர், திடீரென்று இந்த உலக நினைவற்றவராய் மாறிப்போய்த் தம் கண்களை மூடிக்கொண்டு மௌனத்திலாழ்ந்து விடுவார். பெண்சாதி, பிள்ளை, சொத்து, சுகம் முதலிய அத்தனை பொருள்களும் அவருடைய நினைவிலிருந்து நீங்கிப்போய்விடும்; சிறிது நேரம்வரைக்கும்!

அதிகமாகச் சொல்லப் போனால் தன்னுடைய அன்றாட வேலைகளையெல்லாம் கூடச் சரிவரக் கவனித்துக் கொள்ளமாட்டார். சாப்பிடப் போனாரென்றால், கை, சாதத்தின்மேல் தான் இருக்கும்; யோசனையிலாழ்ந்து விடுவார். 'என்ன இப்படிக் கல்லாய் உட்கார்ந்து விட்டீர்களே?' என்று மனைவியின் குரல் குத்திக் காட்டிய பிறகு தான் உணவருந்துவார்.

பால்காரன் வந்திருக்கிறானா? சலவைத் தொழிலாளி வந்திருக்கிறானா? பள்ளிக்கூடம் போன குழந்தை திரும்பி வரவில்லையா? வீட்டில் வேலை பார்க்கும் வேலாயுதம் ஒழுங்காக நடந்து கொள்ளமாட்டேன் என்கிறானா?... இந்த விஷயங்களெல்லாம் அவருக்கு வெகு தொலைவு. எல்லாவற்றையும் அவருடையமனைவி தான் பார்த்துக்கொள்ள வேண்டும்!

முருகானந்தத்திற்கு 'அவர் உண்டு, அவருடைய சிந்தனை உண்டு' அவ்வளவுதான். யார் வந்தாலென்ன, வராவிட்டாலென்ன? 'ஏன் இந்தமாதிரியாக மாறிப்போய் விட்டார்?' என்ற சந்தேகம் அவருடைய மனைவிக்கு நாளுக்கு நாள் வலுத்துக் கொண்டே வந்தது. இன்றைக்கு எப்படியாவது அவரிடமே கேட்டுச் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளுவோமென்ற முடிவுக்கும் வந்து விட்டார் அந்த அம்மையார்!

அவர் வழக்கமாக உட்கார்ந்திருக்கும் அறைக்குள் நுழைந்தாள். அங்கே அவரைக் காணோம். மேசையின் மீது கட்டுக் கட்டாகக் காகிதங்கள் கட்டிவைக்கப் பெற்றிருந்தன! பழங்காலத்துப் புத்தகங்களெல்லாம், மூலைக்கொன்றாகச் சிதறிக்கிடந்தன!

அவளுக்கு ஒரே வியப்பாக இருந்தது!

ஒரு காகிதத்தை எடுத்துப் பார்த்தாள்.

'என் திட்டங்கள்' என்ற கொட்டையான தலைப்பின் கீழ்ப் பின்வருமாறு எழுதியிருந்தார் முருகானந்தம்!

"நஞ்சையும், புஞ்சையும் சூழ்ந்திருக்கும் தஞ்சையையும், இதன் நடுவே காளான்களைப் போல எழும்பியிருக்கும் கட்டடங்களையும் முதலில் இடித்துத் தரைமட்டமாக்க வேண்டும்."

இதைப் படித்ததும் தூக்கி வாரிப்போட்டது அவர் மனைவிக்கு!

'சரி, சந்தேகப்பட்டது சரியாகத்தான் இருக்கிறது. பைத்தியம் நன்றாக முற்றிப் போய் மூளையைக் கெடுத்து விட்டது' என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டு மேலும் படிக்கலானாள்.

"அப்படிக் கட்டிடங்களை உடைக்க முடியாமல் போய் விட்டால் டைனமெட்டுகளையும் பாம்களையும், வெடிமருந்துகளையும் வைத்து இரவோடு இரவாக அந்த வேலையைச்செய்து முடித்த பிறகு தான் என் மனம் நிம்மதியடையும்"

அவள் உடல் கிடு கிடுவென்று நடுங்க ஆரம்பித்தது. 'பாவிமனுஷன், யாராருடைய பேச்சுக்களையோ கேட்டுக் கொண்டல்லவா கெட்டுக் குட்டிச் சுவராகப் போய்விட்டார். நாட்டைக் கெடுக்கும் நாச வேலையில் இறங்கித் தொலைத்து விட்டாரே! இதிலிருந்து இவரை எப்படிக் காப்பாற்றுவது? வெளியில் இந்த விஷயம் இரண்டு பேருக்குத் தெரிந்தால் என்ன ஆவது?' என்ற கவலை அவளுடைய கண்களில் கண்ணீரை வருவித்து விட்டது. புடவைத் தலைப்பால் கண்களைத்துடைத்துக்கொண்டு மேலும்தொடர்ந்தாள்.

"இந்த வேலைகள் வெற்றிகரமாக முடிந்ததும், பிறகு புதிய, புதிய மாட மாளிகைகளையும், கூடகோபுரங்களையும் கட்டி முடிக்க வேண்டும். வானளாவிய அரண்மனைகளையும், வளமிக்கசோலைகளையும், விரைவில் ஏற்படுத்த வேண்டும். தற்கால நவீன நாகரிகக் குழந்தைகளான மோட்டார், மின்சாரம் முதலியவை அந்தப் பக்கத்தில் தலைவைத்துக் கூடப் படுக்கக்கூடாது. விளக்குகள் வேண்டுமா? லஸ்தர்களும், குளோப்புகளும் போட்டுக் கொள்ளலாம; தீவர்த்திகளையும் தடையின்றி உபயோகித்துக் கொள்ளலாம்; இரதங்களும், புரவிகளும், யானைகளும் வேல், வாள் தரித்த வீரர்களும் பார்க்குமிடங்களிலெல்லாம் நீக்கமற நிறைந்திருக்க வேண்டும். ராஜராஜரும் ராஜேந்திரரும் இல்லையென்றால் கவலையில்லை. அவருடைய பரம்பரையின் வழித்தோன்றலில் வந்த யாரையாவது பிடித்து முடிசூட்டி மன்னனாக்கி விடவேண்டும். அரசசபையில், புலவர்களும், கவிராயர்களும் கவிபாடிப் பொற்கிழிகள் பெற்ற வண்ணமாகவே இருக்க வேண்டும்! அங்கே அரசர் தலைமையில் நடக்கும் 'கவியரங்கத்தில்' என்னுடைய கவிதைகளை அரங்கேற்றி, தங்க நாணயங்களையும், பட்டுப் பீதாம்பரங்களையும் பரிசாகப் பெற்று 'கவிராஜசிங்கம்'என்ற வீரவிருதையும், தோடாவையும் அணிந்து அரச வீதிகளிலே, பொன்தேரின் மேல் ஏறிப் பவனி வரவேண்டும். அந்தக் காட்சியைக் கண்டு உற்றார், உறவினர், ஊரார் முதலியவர்கள் களித்து 'விந்தை, விந்தை' யென்று வியப்புற்று அக மகிழ வேண்டும். இந்த, என் கனவு விரைவிலேயே நனவாக மாறப் போகிறது. நிச்சயமாக, மாறும்

ஐயமில்லை. கம்பன் முதல், காளமேகம் வரை பெற்றெடுத்த இந்நாட்டில் பொன்னுக்கும் கூழுக்கும கவிபாடக் காத்திருக்கும் என்னைக் 'கவி' யென்று யாரும் போற்றிப் புகழ்வார்கள்; புகழத்தான் போகிருர்கள். குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பும் உண்டோ? — இப்படிக்கு அரண்மனையைச் சேர்ந்த கவிராஜசிங்கம், முத்துத் தாண்டவபுரம் முருகதாசக் கவிராயர்."

படித்து முடித்ததும், அவளுக்கு ஆத்திரம் ஒருபக்கமும், சிரிப்பு ஒரு பக்கமுமாகக் கிளம்பிற்று! அதைக் கசக்கி எறிந்து விட்டு "கவிபாடப் போகிருரோ, கவி,! பாடட்டும், பாடட்டும், வீட்டைவாசலைக் கவனிக்காமல் எப்பொழுது பார்த்தாலும், கண்ணை மூடிக் கொள்ளுவதும், வாயைமூடிக் கொள்ளுவதுமாக இருந்தால் குடும்பத்தை யார்நடத்துவது? அவரா, அல்லது நானா?" என்று இரைந்து கொண்டே அங்கிருந்து கிளம்பினுள்.

சிறிது நாட்களுக்குள் முருகதாசரென்று புனைபெயருடைய முருகானந்தத்தின் வீட்டில் அமைதி குடியேறி அமர்ந்தது. காரணம், அவருடைய மனைவி 'பிறந்த வீட்டிற்குப் பெற்ற பிள்ளையையும் அழைத்துக் கொண்டு போய்விட்டாள்.

எஞ்சியிருந்தது, முருகானந்தமும், வேலைக்கார வேலாயுதமும்தான். சகல விதமான வேலைகளையும் அவன தான் கவனித்துக் கொள்ள வேண்டிய தாயிற்று! முருகானந்தர் கவிதை புனைவதிலும், கற்பனையில் மூழ்குவதிலுமே கவனத்தையும், காலத்தையும் கடத்திக் கொண்டிருந்தார்.

"வேலாயுதம்,... வேலாயுதம்!"

"என்னுங்க, கூப்பிட்டீங்களா?"

"'ஆமாம்' அப்பனே! அழைத்தேன்! 'அடிசில்' ஆயத்தமாகி விட்டதா?"

"என்னுங்க? எப்போ பார்த்தாலும், புரிகிறமாதிரிப் பேச மாட்டேங்கிறிங்களே! என்ன கேக்கிறிங்க?"





"வேலாயுதம்! நீ மாதாவின் சொல்லைப் புரிந்துகொள்ளா மதலையாகவே வாழ்கின்றாய், விந்தை! விந்தை! 'அடிசில்' என்றால் 'சமையல்'! யான் உன்னை நோக்கி வினவியதும் அஃதே!—ம்...மொழிச்சுவை யறியா மூடனாக வாழாதே!"

"என்னாங்க, மனிசனைப் பார்த்து 'முதலை'ங்கிறீங்களே"

"முதலையல்லடா, 'மதலை'! மதலையென்றால், குழந்தை"

"விளையாடாதிங்க எசமான்! வர்ர ஆனி வந்தா எனக்கு வயசு இருபத்தி ஒன்பதரையும் மூணு நாளும் ஆகப் போவுது, நீங்க என்னடான்னா குழந்தைங்கிறீங்களே"

"நகைச்சுவையா லென்னைப் பருக்க வைக்கிறாய், செல், விரைவில், அறுசுவையுண்டி தயாராகட்டும்"

"ஊருக்குப் போன அம்மாவுக்குக் கடுதாசி எழுதிப் போட்டீங்களா!"

"மறு பேச்சுப் புகலாதே, மறைந்துபோ, வேலாயுதம் வீணாக மனதை நோகச் செய்யாதே! கவிஞர்களின் வாழ்வே இந்த மாதிரியாகத் தானிருந்து வந்திருக்கின்றது. தொல்லை தரும் இல்லக்கிழத்திகளால் தான், தொல்காப்பியரிலிருந்து, தொன்னையூர்க் கன்னிவனநாதக் கவிராயர் வரையில் தாங்கொணாத் துயரமுற்றனர். நினைத்தாலே நெஞ்சு பஞ்சாகிறது!"

"அப்போ, வேறே ஏதாச்சும் கலியாணம் பண்ணிக்கப் போறீங்களா?"

"ஆ! என்ன புகன்றனே? வேலாயுதம், இனித்தாளேன்! தடி,கொடு! தண்டனையை ஏற்றுக் கொள்—நான், வள்ளுவன் வழிசெல்ல நினைப்பவன்! மனைவியைப் புறக்கணிப்பதா? உலகம் தூற்றும்படியான செயலல்லவா அஃது? மறுமணமா?"

"கொஞ்சம் பொறுங்க! நீங்கதானே 'அம்மாவைக் கிழவி'ன்னு சொன்னீங்க"

"புத்தியில்லாதவனே! கிழவியல்லடா, கிழத்தி—இல்லக் கிழத்தி—அதாவது மனைவி. சரி உன்னுடன் உரையாடிக் கொண்டிருக்க இது தருணமல்ல! இன்னும் எத்தனையோ கவிதைகளை இயற்ற வேண்டியிருக்கிறது"

"ஏங்க, எப்போ பார்த்தாலும் கவிதை; கவிதைன்னு உயிரை உடுறீங்க, நேத்து சாயங்காலமா, ஒரு ஆண்டிப் பண்டாரம் பாடுனன் பாருங்க—அட, அட, அடா?"

"அப்பனே! அது ஆனந்தக் களிப்பாக இருந்திருக்கும் நான் பாடுவது அதல்ல! கவிதை—பொன்னான கவிதைகள்"

"மண்ணாப்போச்சு போங்க?"

"என்ன சொன்னுய்? என் கவிதைகள் மண்ணாகப் போவதா? ஏ, முழு மூடனே, பறந்து செல் இவ்விடத்தை விட்டு—போ, போ, என் முகத்தில் விழிக்காதே!"

"சரிங்க! சம்பளம்?"

"வறுமை, புலவனின் பிறப்புரிமை"

"எனக்குத் தெரியாதுங்க; இப்போ ரயிலுக்கு மட்டும் ஞலும் எதிஞச்சும் கொடுங்க. பாக்கியெல்லாம் அம்மா வந்ததும் கேட்டு வாங்கிக்கிறேன்."

"எட்டணுப் போதுமா? ஏன் விழிக்கிருய்? எட்டிக்காயெனக் கசக்கிறதோ?"

"போதும் குடுங்க! நான் போறேன்"

கோபமாக அறைக்குள் நுழைந்த முருகானந்தம், விழுந்தடித்துக் கொண்டு வெளியே ஓடிவந்தார். முகம் மாறி. உடலில் வியர்வைகண்டு போயிருந்தது!

"வேலாயுதம்!"

"என்னுங்க?"

"அறைக்குள் நான் எழுதிக் குவித்திருந்த கவிதைக் கட்டுகளெல்லாம் எங்கே? எங்கே? எங்கேயடா?"

"ஓ! அந்தக் கடுதாசிங்களா? வெந்நீர் அடுப்புக்கும் சமையல் அடுப்புக்குமா வைச்சுக் கொளுத்திப் பிட்டேனுங்களே; மிச்சம் கொஞ்சம் இருக்குமே, பழைய காகிதம் வாங்கிறவனையும் இன்னைக்கு வரச்சொல்லியிருக்கேன், வந்தா அவன் கிட்டே எடுத்துப் போட்டுடுங்க" என்றுன் வேலாயுதம்.

முருகானந்தம் திடீரென்று மயங்கிக் கீழே சாய்ந்துவிட்டார்!

உயர்ந்த உல்லாசம் அவர்கட்கு

3. ஒரே ஒரு கதை

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

பாகவதர் திரௌபதியின் திருமணத்தைப்பற்றி விவரித்துக் கொண்டிருந்தார். முதலியாரோ, அறையில் துகிலுரியும் படலத்தை ஆரம்பித்து விட்டார். அவள் கதறினாள்! கண்ணன் வரவில்லை! காமவெறியன் சிரித்தான்! கதவுகளெல்லாம் அடைக்கப்பட்டு இறுகத் தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தன. பெண்களையெல்லாம் 'கோகுலாஸ்திரிகள்' என்று எண்ணிக்கொண்ட முதலியார், கோலாகல லீலையில் இறங்க ஆரம்பித்துவிட்டார். காண்டா மிருகத்தின் கையிலிருந்து தப்புவதற்காக, இங்குமங்கும் ஓடிக்கொண்டிருந்த செல்லியின் கண்களுக்கு, மாம்பழம் அறுத்து விட்டு வைத்திருந்த கத்தி, தென்பட்டது. சட்டென்று அதைக் கையிலெடுத்துக் கொண்டாள். முதலியார் ஒரு கணம் திகைத்துப் போனார்!

அங்கே, மகிழ மரத்தைக் காத்துக் கொண்டிருந்த அப்பாவிக்கு இருப்புக்கொள்ளவில்லை. ஏமாற்றி விட்டாளே என்று எண்ணிக்கொண்டு, ஏக்கத்தோடு எழுந்தான். தள்ளாடிக் கொண்டே முதலியார் வீட்டை நோக்கி நடந்தான். பாகவதரோ, திரௌபதிக்கு மணமானபின் அவள் ஐவருக்கும் பத்தினியான அற்புதத்தை எடுத்துச் சொல்லி, அபிநயம் பிடித்துக்கொண்டிருந்தார்.

"காண்டா மிருகமே! கதவைத் திறடா"

"கழுதை! என்னிடமா உன் கைவரிசையைக் காட்டறே"

"கிட்ட நெருங்கினே, தொண்டையைச் சீவிப்புடுவேன். கதவைத்திறடா"

முதலியார் நடுங்கினார். அவள் நாகப் பாம்பாகிவிட்டாள். கடைசியில் கற்புக்கு வெற்றி! கதவைத் திறந்து விட்டான் காமவெறியன். கையிலிருந்த கத்தியோடு, வேகமாக வெளியேறினாள் செல்லி!

தலைவிரிகோலமாக எதிரே வரும் செல்லியைப் பார்த்த செல்லமுத்து பயந்து விட்டான். அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. செல்லி என்று கத்தினான். அவள் நிற்கவில்லை. சென்று விட்டாள். ஒன்றும் புரியாத அப்பாவி, முதலியார் வீட்டை அடைந்தான். அங்கே, அவனுடைய 'தங்கமான' மனிதர், அவனை, வரவேற்று, என்று மில்லாமல் அவருடைய தனியறைக்கு அழைத்துச் சென்றார்.

"டேய் செல்லமுத்து!"

"சாமி"

"நான் யாரென்று தெரியுமா?"

"எசமான்...நீங்க..." என்று குழறினான்.

"நிறுத்து. நான் கேட்பதற்குச் சரியான பதில் சொல்ல வேண்டும்"

"கேளுங்க"

"செல்லியோடு உனக்கு என்னடா சகவாசம்?"

"அவ என்மாமன் மகளுங்க"

"சரி தான்.தோட்டக் காவலை மறந்துட்டு, ராத்திரியெல்லாம் அவ கூடச் சுத்தறது. கேட்டா மாமன் மக! தடிப்பயலே!" என்று இரைந்தார்.

அவன் மௌனமாக நின்றான். இந்த மௌனத்தைத் தான் அவர் எதிர்பார்த்தார். மன்னிக்கும் பாவனையாக, குரலைச் சற்றுத் தளர்த்தி, குழைவுடன் பேசலானார்.

"சரி, போனது போகட்டும், இனிமேலாவது..."

"தெரிஞ்சுக்கிட்டேன் எசமான்"

"என்னடா தெரிஞ்சுக்கிட்டே"

"அவகூடச்சேரலே! சேர்ந்து சுத்தலே"

"அது கெடக்கு, ஒன்னாலே ஒரு உதவி ஆசணும்"

செல்லமுத்து அவர் வாயைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

"வந்து... செல்லியை..." அவர் அப்படியே தயக்கத்தோடு வார்த்தைகளைத் தடை செய்தார். ஆனால் அவர் கண் முன்பு, இரும்புப் பெட்டியும், அதிலிருக்கும் பச்சை நோட்டுகளும் அவருக்குத் தைரிய மூட்டின. அவர் துணிந்து விட்டார்.

"......செல்லியை ... ... இன்றைக்கு... இங்கே..." செல்லமுத்துவின் உடலிலே திடீரென்று மின்சாரம் பரவியது. நரம்புகள் புடைத்துப் போய் நின்றன. கண்களிலே இரத்த ஓட்டம் பாய்ந்தது.

"இன்றைக்கு... இங்கே..." என்று துடித்தான்.

"கொண்டு வரணும்"

'ஆங்' என்று சத்தமிட்டான். அவரோ பேசிக் கொண்டே போனார்.

"இதைச் செய்தீன்னா, நீ எது கேட்டாலும் இல்லையென்னாமல் தருகிறேன்" என்றார்.

பின்னால் முதலியார் பேசிய பேச்சுக்கள் அவன் செவியில் விழவில்லை. அவன் தலை சுழன்றது. அறையிலே உடைந்து கிடந்த வளையல்கள் — சிதறிக் கிடந்த மல்லிகைப் பூ—செல்லியின் கோரமான முகம்—அவிழ்த்து விடப்பட்ட கூந்தல்—அவள் கையிலிருந்த கத்தி—இவைகள் அவனுக்குக் கதை கதையாய்ச் சொல்லின. அவன் கண்கள் தீப் பொறியைக் கக்கின. 'காதகா' என்று கூவிக் கொண்டே அவன் முதலியார் மேல் பாய்ந்தான்.

அதற்குள் முதலியார் போட்ட கூக்குரலைக் கேட்டு அவரது 'அடி ஆட்கள்' ஓடி வந்தனர்.

செல்லமுத்துவைப் பிடித்து நிறுத்தினர்.

'கட்டு புளிய மரத்தில்" என்றார் முதலியார்

"கொண்டுவா குதிரைச் சவுக்கை!" என்று கூவினார்

காரியங்கள் மளமள வென்று நடந்தன. ஊர் மக்களோ துரௌபதியின் துகிலுரியும் படலத்தைப் பாகவதர் சொல்ல, தூங்கியும் தூங்காமலும் ரசித்துக் கொண்டிருந்தனர்.

"நூறு விளாசல்"! என்றார்.

செல்லமுத்துவின் சட்டைகள் கிழிக்கப்பட்டன.

"ஒன்று... இரண்டு... மூன்று ..."

இரத்தம் கசிய ஆரம்பித்தது

"பனிரெண்டு..பதின்மூன்று.."

சதையைப் பிய்த்துக் கொண்டு வந்தது சாட்டை. அந்தக் கொலைபாதகச் செயலை அதற்குமேல் என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. அப்படியே மயங்கி விழுந்துவிட்டேன்.

மறுநாள் மாலைதான் கண்விழித்தேன். உடம்பு அசதியாயிருந்தது. முந்தின நாள நடந்த காட்டுமிராண்டித்தனம் என் கண் முன்னே நர்த்தனமாடத் தொடங்கியது. அடிவிழுவதைப் பார்த்துக் கொண்டிருந்த நானே மயங்கி விழுந்து விட்டேன் என்றால் அடியைப் பெற்றுக் கொண்டவனுக்கு...... அப்பப்பா! என்னால் நினைக்கவும் பயங்கரமாயிருக்கிறது. மெதுவாகத் தோட்டத்துப் பக்கம் காற்றுவாங்குவதற்காகக் கிளம்பினேன்.

அங்கே, அப்பொழுதான் ஒரு சவ ஊர்வலம் புறப்படத் தயாராயிருந்தது, "இறந்தது யார்?" என்று கேட்டுக் கொண்டே அருகில் சென்றேன். தலையிலிருந்து கால் வரைக்கும் துணியால் சுற்றி மூடப்பட்டிருந்தது.

"செல்லமுத்து" என்ற வார்த்தை என் செவியிரண்டையும் துளைத்துக் கொண்டு சென்றது. தலை சுற்றியது, மீண்டும் மயங்கி விழுந்து விட்டேன்—.

இவ்வளவு தானய்யா, கதை! இதைத்தான் சொல்ல விரும்பினேன். நான் உம்மைக் கேட்டுக் கொள்வதெல்லாம் ஒன்றே ஒன்று தான். இனிமேலாவது, ஏழைமக்களைக் காணும் போது உங்கள் ஈரமற்ற நெஞ்சிலே, இறுகிப்போன இருதயத்திலே, இரக்க மென்ற நீர் சுரக்கவேண்டும் என்பதுதான்.

வணக்கம்

வழிப்போக்கன்.

கண்ணகி கழகம்

அரண்மனை சிறுவயல் கண்ணகி கழகத்தின் சார்பில் 14-3-49 அன்று இவ்வூர் ஜமீன்தார் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நிகழ்ந்தது. அவ்வமயம் 'பொன்னி' ஆசிரியர் முருகு சுப்பிரமணியன், நா. முத்து, நாரா நாச்சியப்பன் ஆகியோர் திராவிடர் கழகத்தின் நோக்கத்தையும் வேலைத்திட்டத்தை விளக்கிப் பேசினர். இக்கூட்டம் அக்கிராமத்திற்கே மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

பாரதிதாசன் பரம்பரை

வெண்ணிலவே

வெண்ணிலவே! வெகுகால மாக இந்த
விண்மீது சுழல்கின்ற தொன் மதியே!
தண்ணொளியே யுருவாய சாந்த வீரர்
தன்மானத் திராவிடத்தா ரென்னுமெங்கள்
வண்டமிழர் மரபாண்ட வல்லு னர்கள்
வாழ்ந்திட்ட அக்காலம் கண்ணுற்றநீ
வன்செயலார் வலைசிக்க வாடும் இந்த
மாத்தமிழர் நிலைநோக்கி மனமிரங்காய்?

போரிலே புறங்காட்டாப் புலிகள் தம்மைப்
புல்லேந்தி ஏய்த்தார்கள் என்னுமொரு
காரியங் கண்டிட்ட பின்னுமேன் நீ
களிப்போடு முழுமேனி காட்டுகின்றாய்?
வீரியம் இல்லாஅவ் வீணர் காணும்
விண்ணினை விட்டுப்பே ராழி மூழ்கிக்
காரிருள் போல்சூழ்ந்த மடமை நாட்டைக்
கடந்துபோ! நின் வீச்சால், பயனிலையே!

தோழர் தி. அரசமணி நெல்லை வட்டத்தைச் சேர்ந்த ஐயாபுரத்தைச் சேர்ந்தவர். இப்போது கோவை விவசாயக் கல்லூரியில் கலை பயின்று வருகிறார். — ஆசிரியர்





துரோகி

- தில்லை வில்லாளன் -

ஏழாம் அத்தியாயம்

தாபமும் தூபமும்

காலை வெயிலில் தனது இளஞ் சிரிப்பைக் காட்டிக் கொண்டிருந்தது அந்த மாளிகை அது சுபேதாரின் சொந்த 'வாசஸ்தலம்'! சுபேதார் தனது தலைநகரமாகிய மூர்ஷிடாபாத்தில்தான் அந்த அழகிய பளிங்கு மண்டபத்தை ஏற்படுத்தி வைத்துக்கொண்டிருந்தான். சாதாரணமாகத் திவான் முதலிய பெரிய அரசாங்க அலுவலாளர்களுக்குப் பேட்டி கொடுப்பதும் இங்குதான். நண்பர்கள் அநேகமாகச் சுபேதாரை இங்குதான் சந்திப்பார்கள்.

அந்தப் பளிங்கு மண்டபத்தின் கதவுகள் திறந்திருந்தன. சேவகர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். சற்று உள்ளே நுழைந்தால்—? அந்தப் படிகள், அப்பப்பா எவ்வளவு வழுவழுப்பு! அதன் மீது கம்ளம், அதைத் தாண்டினல் இரத்தினக் கம்பளம் விரித்த தரைகள், சுவரெங்கும் ஒரே சித்திரங்கள்! பதுமைகள் உயிர்பெற்ற பாவையர் போன்று வருபவரைக் கையேந்தி வரவேற்றுக்கொண்டிருந்தன. இவற்றையே நாள் முழுவதும் பார்த்துக்கொண்டிருக்கலாம்.

இப்பொழுது சுபேதார்......?

சுபேதார் அலிவர்திகான் ஒரு அலங்காரமான ஆசனத்தில் அமர்ந்திருந்தான். அவனுக்கு எதிரில் ஒரு பெரிய உருவம் உட்கார்ந்திருந்தது. பக்கத்தில் ஒரு பூங்கொடி நின்றுகொண்டிருந்தாள்!

"அமீன்சந்த், தங்கள் வரவு நல்வரவாகுக"

"கனம் சுபேதார் அவர்களுக்கு நமஸ்காரம். தங்கள் வாழ்வு பெருகட்டும்."

"அருகில் நிற்கும் ஆரணங்கு யாரோ?"

"என் மகள் போலத்தான்"

"என்னிடம் அவள் எதிர் பார்ப்பது என்ன?"

"சுபேதார் அவர்களே, இவள் என் வளர்ப்புப் பெண். பெயர் நளினி. அரசாங்கத்தில் பணியாற்ற அவாவுகிருள். அதுவும் தங்களிடம் சேவகம் பார்க்க ஏங்கித் தவிக்கிருள்."

அலிவர்திகானின் சுருங்கிய முகத்தில் ஒரு தெளிவு, ஒளி வீசியது. அவனது நரைத்த உள்ளத்திலும் ஒரு நச்சு எண்ணம் உச்சிக் கிளையேறிக் கொண்டது! அவளை ஒரு முறை பார்த்தான். அவளோ கண்ணெடிப்பால் அவனது விலா எலும்புகளை நோகச் செய்தாள். பவள இதழ்க் கடைகளில் முத்துக்கள் சிதறின! அலிவர்திகான் தன் வரண்ட வாழ்வில் புதியதோர் பூந்தோட்டம் ஏற்பட்டதாகக் கனவு கண்டான்.

"ஏன், என்னிடமே இருக்கட்டும் நீர் விரும்பினுல்!"

"சரி, தங்கள் விருப்பம்"

இத்துடன் அந்த உரையாடல் முடிந்தது போலச் சற்று அமைதி நிலவியது. அதற்குள் நளினி தானுகவே அங்கிருந்த மயில் தோகை விசிறியைக் கொண்டு அலிவர்திகானுக்கு விசிற ஆரம்பித்தாள்! அலிவர்திகான் மீண்டும் பேச்சைத் தொடங்கினுன்.

"அந்த வெள்ளை வெறிநாய்கள் தங்களை அனுப்பினவோ?"

"என்னையா, எதற்காக? அவர்களுக்கு நானு தூது? தங்கள் உப்பைத் தின்று வளரும் இராஜபக்தியுள்ள பிரஜை"

"சபாஷ், அப்படிச் சொல்லும். ஆனுலும், ஏதேனும் சமரசம் செய்ய அனுப்பியிருப்பார்கள் என்று எண்ணினேன்"

"எனக்கு ஒன்றும் புரியவில்லையே, சமரசமா? அப்படியானுல் ஏதாவது மனத்தாங்கல், உள் வீக்கம், ஊமைக்காயம் உண்டோ?"

"ஊமைக்காயமல்ல, வெட்டி அகற்றவேண்டிய பெரியகட்டிதான்"

"அப்படியென்ருல்?"

"சுபேதார் கட்டளையை அல்ல, வேண்டுகோளை நிறைவேற்றத் தவறி விட்டார்கள். முடியாமையாலல்ல ஆணவத்தால், அகங்காரத்தால்!"

"என்னைக் கேட்டபோதே நான் சொன்னேனே! என்ன ஆச்சரியம்? சுபேதார் கேட்டுமா, மறுத்துவிட்டார்கள்! நாய்கள் சுடுகாட்டில் நாட்டியமாடுகின்றன"

"அது கிடக்கட்டும், நீர் வந்த காரியம்?"

"ஒன்றும் பிரமாதமில்லை. தங்களைப் பார்த்து விட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன். சரி வருகிறேன்"

"அமீன்சந்த் எமது நெடுநாள் நண்பர் நீர்! என்னிடம் எதையும் எப்பொழுதும் சொல்லலாம். எதையோ சொல்ல வந்தவர் மறைக்கிறீர். ஒளிக்காதீர்! சொல்லும். அச்சந் தேவையில்லை"

"தாங்கள் முன்னமேயே கோபமாக இருக்கிறீர்கள். அத்துடன் இதையும் சொன்னுல்... ...எரிகிற நெருப்பில் எண்ணெய் விட்ட மாதிரிதான்!"



"அவையடக்கம் அளவிற்கு மீறுகிறது......போதும்"

"இல்லை.........ஒன்றும் பிரமாதமில்லை......எல்லாம் உங்கள் பேரன்......"

"ஸிராஜுவையா சொல்லுகிறீர். அதுதான் தெரிந்ததாயிற்றே! வாலிப விளையாட்டில் பல திருவிளையாடல்கள் செய்கிறான். கேள்விப் படுகிறோம். எல்லாம் திருந்தி விடுவான்"

"சில தினங்களுக்கு முன்னால் என் மகள் ஊர்மிளாவைக் காளிகோயிலில்..."

"அநியாயம், மன்னிக்க முடியாத குற்றம்"

"ஐயோ அதைக்கூடப் பெரிதாக நான் நினைக்கவில்லை, அதனை மறந்துவிட்டேன், மன்னித்தும் விட்டேன் நாட்டின் பேரால்! ஆனால்..."

"பின்னர்?"

"சுருங்கச் சொல்லி விடுகிறேன். அவர் இளமையிலேயே சற்றுத் தடித்தனத்துடன் திரிந்ததால் கல்வி போதவில்லை. அவர் பழக்க வழக்கங்கள் யாவும் கீழ்த்தரமானவை. குழந்தையிலிருந்து கொடிய பழக்கங்களை வளர்த்து வருகிறார். சேர்க்கையோ சேற்று நாற்றந்தான். குறிப்பாக முடீன்கானின் நட்பு கூடவே கூடாது"

"போதும், போதும்"

அவர்களின் நீண்ட உரையாடல் கடைசிக் கட்டத்தை யடைந்தது. அலிவர்திகானது வயதேறிய முகத்தில் கவலை

படர்ந்தது. அமீன்சந்த் இருப்புக் குழாயில் வெடியைக் கிடித்து விட்டுக் காத்திருக்கும் —திருவிழாவில் வரும்— வாண வேடிக்கைக்காரன் போன்றிருந்தான். அவன் முகம் அதைத்தான் சொல்லிக் கொண்டிருந்தது. வலேயை விரித்துவிட்டுக் காட்டு விலங்குகள் வந்து விழுமா என்று ஏங்கிடும் வேடன் போலானுன் அமீன்சந்த்.

“இவைகளே எல்லாம்...” என்ருர் சுபேதார் ஆழ்ந்த பெருமூச்சுக்கிடையே!

“மக்கள் அப்படிப் பேசிக் கொள்கிருர்கள், தேவா! எனது சொந்தக் கற்பனேயல்ல ஒற்றர்களின் தலேவர் தாங்கள், தங்களிடம் பொய்யா?”

“நல்லது, ஏற்ற நேரத்தில் உண்மையைச் சாற்றினீர். இந்த நாட்டின் எதிர்காலத் திருவிளக்கு இப்படியா உலவுகிறது?”

“நமஸ்காரம்”

அமீன்சந்த் அலிவர்திகானிடம் விடைபெற்ருன். நளினி தாளுகவே முந்திக்கொண்டு விடை தந்தாள். திரும்பி வரும் வழியெங்கும் ஒரே ‘கம, கம’ என்ற வாசனே மூக்கைத் துளேத்தது. நல்லசாம்பிராணி, அல்லது வத்தியின் மணம்! எங்கும் ஒரே புகை, தூபம். அமீன்சந்த் அந்தப் புகை மணத்தை நுகர்ந்தான். சிரித்தான். “தூபம் பெருகிவிட்டது” என்று தனக்குள்ளாகவே எண்ணினுன்.

எட்டாம் அத்தியாயம்

சுபேதாரும் இனிவரும் சுபேதாரும்

அலிவர்திகான் குகையில் புலி நடமாடுவது போல இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்தான். சுபேதாரின் பக்கத்தில் சத்தம் காட்டாமல் மெல்ல நடந்து வந்து ஸுராஜ் நின்று கொண்டிருந்தான். ஆனல் சுபேதார் இன்னும் அவனேப் பார்க்கவில்லே. சட்டென்று சுபேதார் நின்ருன்.

“என்ன, அமீன்சந்த் ஏன் வந்தீர்?”

“தாதா! நான் வந்தது உங்களுக்குத் தெரியவில்லேயே?”

“ஆ ஸுராஜ்! நீயா, நீ எப்போது இங்கு வந்தாய்?”

“இப்பொழுதுதான்.........”

“உன்னேப்பற்றித்தான் நினேத்துக் கொண்டிருந்தேன்”

“என்னேயா?”

“ஆம், உனது துடுக்குத்தனம் வளர்கிறது. என்னல் சகிக்க முடியவில்லே”

அலிவர்திகான் மிகவும் கோபமாகப் பேசினுன். ஸுராஜ் மெதுவாக நிதானத்தை வரவழைத்துக் கொண்டான்.

“தாதா...........”

“போதும், உனக்கு ஊர்மிளாவைத் தெரியுமா?”

“யாரது?”

ஸுராஜ் ஒன்றுந் தெரியாதவன் போல விழித்தான். அருகில் நின்று கொண்டிருந்த நளினி ‘களுக்கெ’ன்று சிரித்து விட்டாள்.

“நளினி, நீ உள்ளே போ” .

அலிவர்திகானின் அதிகாரக் குரலின் தொனி இது!

"காளி கோவிலில் நீ நடத்திய அக்கிரமத்தை அப்பெண்ணின் அப்பனே வந்து கூறிவிட்டான். என் மனம் நொந்து சொல்கிறேன். உனது விபரீதமான போக்குக்கு ஒரு முடிவு தான் எப்போது?"

"மன்னித்துவிடுங்கள் தாதா! நடந்தது நடந்து விட்டது. இனிமேல் இப்படி நடக்க மாட்டேன்"

சிறிது நேரம் அங்கு அமைதி அரசோச்சியது. பிறகு அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு ஸுராஜுவின் குரல் புரட்சி செய்தது!

"இந்த வெள்ளைப் பேய்களை விரட்ட வழியே இல்லையா?"

"ஏன்?"

"அவர்கள் செய்கிற தொல்லை பொறுக்க முடியவில்லை"

அந்தக்காலத்தில் வெள்ளையர்களின் போக்கு உண்மையில் வெறுக்கத்தக்கதாகவே இருந்தது. அவர்களின் நாவாய் வலிமையினால் எதையும் செய்து விடலாம் என்று தவறுதலாக நினைத்துக் கொண்டிருந்தார்கள். அதனால் தான் இந்தியக் கப்பல்கள் வியாபார சம்பந்தமாகக் கடலில் சென்றால் வெள்ளையரது கப்பல்கள் அவைகளை வளைத்துக் கொள்ளும்; வழிப்போக்கை மாற்றித் தொல்லை தரும். முடிந்தால் கப்பல்களைச் சூறையிட்டுவிடுவார்கள். எதிர்ப்புச்செய்தால் அந்த வணிகர்களையே கொன்று விடுவார்கள். பிரயாணிகள் கப்பல்கள் செல்லுமேயானால் வளைத்துக் கொண்டு, அழகிகள் கிடைத்தால் அபகரித்துச் செல்வார்கள். இப்படி நடந்து வந்தார்கள் ஆங்கிலேயர்கள். இதனை ஸுராஜ் கேள்விப்பட்டு உள்ளங்குமுறினான்.

மேலும் இரண்டு திடுக்கிடும் செய்திகள் அவனை உண்மையில் ஒருகுலுக்குக் குலுக்கி விட்டன! ஏனெனில் அவனது நெருங்கிய உறவினர் இபுராகிம் என்பவர் கப்பல் பிரயாணம் செல்கையில் கொல்லப்பட்டார். அவரது பிணம் மிதந்து வந்து ஹூக்ளியில் ஒதுங்கியிருந்தது. பீகம் என்ற பேரழகியை அவர்கள் தூக்கிச் சென்று விட்டார்கள். இதனைக் கேட்டதும்தான் ஸுராஜ் தன் தாதாவைச் சந்திக்க ஓடோடியும் வந்தான். ஆனால் அவரோ அவனது பழைய செயல்களை நினைப்பூட்டி ஆத்திரத்தைக் கொட்டியளந்தார். ஸுராஜ் மூச்சுவிடாமல் இந்த வெள்ளையரின் குரங்காட்டங்களை எடுத்துக்காட்டினான்.

"இதற்கெல்லாம் காரணம்—?" என்று கேட்டான், சுபேதார் கடைசியாக.

"அந்த வெள்ளைக் குண்டர்கள் தான் காரணம். அவர்களைக் கூண்டோடு பொசுக்க வேண்டும்"

"இருக்கட்டும். விசாரிப்போம். பொறு. பொறுத்திருந்து பார்ப்போம்"

"தாதா! இது ஆலோசனைக்குரியதல்ல. இப்பொழுதே கட்டளையிடுங்கள். அவர்களின் பண்டகசாலைகளைக் கொளுத்திப் படுசூரணமாக்குகிறேன்"

"ஆத்திரக்காரா, எத்தனை முறைகள்தான் நான் அவர்களின் வியாபார அவசியத்தை எடுத்துச்சொல்வது! மீண்டும்

பழைய பல்லவியைப் பாடவா? ஓய்வில் அக்கிரமம், சாரியத்தில் ஆத்திரம்—இது தானா நீ கற்று கொண்ட பாடம்?''

"சரி, தாதா, நான் வருகிறேன்''

ஸுராஜ்—உத்—தௌலா இவ்வளவு சீக்கிரம் பணிந்து விடுவான் என்று அவன் தாதா எண்ணிவிடவில்லை. ஏனெனில் அவன் வெள்ளையரிடம் அளவு கடந்த வெறுப்படைந்திருந்தான் என்பது சுபேதார் அறியாத செய்தியில்லை. ஆனாலும் ஸுராஜ் திடீரென்று பேச்சை முடித்துக்கொண்டான். அதைப பற்றி தவறுதலாக எதையும் சுபேதார் நினைக்கவில்லை. ஆனால் ஸுராஜ் வேறொரு பெரிய திட்டம் போட்டிருந்தாலொழிய இப்படி நடந்து கொண்டிருக்க மாட்டான். ஆகவே, இனி இவரிடம் பேசிப் பயனில்லை என்று வார்த்தைகளை வழக்கத்திற்கு மாறாகச் சுருக்கிக் கொண்டான்.

அவன் வெளியில் வந்தான். அவனுக்குக் கல்கத்தா எரிவதாக ஒரு பெரிய எண்ணம்—அதன் புகை வங்கம், ஒரிஸா, பீஹார் எல்லாப் பகுதிகளிலும் சுற்றி வளைத்துக் கொண்டது. ஏன் இந்தியாவிலே அந்தப் புகை நிரந்தரமாதவிட்டது. மக்கள் "புகை.புகை..." என்று கூவினர்!......... சாம்பிராணித் தூபத்தின் நறுமணம் அவனுக்குச் சுயவுணர்ச்சியைத் தந்தது! (தொடரும்)

முன்னேற்பாடு



— பர்மாவில் அமைதி நிலை பெறவேண்டு மென்பதில் இந்தியசர்கார் — மிகுந்த அக்கரை காட்டிவருகின்றனர். —



கலைஞனின் கனவு

சுலோசனு

ராஜு ஓர் ஓவியன். உணர்ச்சி வெளிப்பட ஓவியந் தீட்டித் தன் கலைக்கு அவன் உயிரளித்துக்கொண்டிருந்தான். ஆனால் அந்தக் கலையினால் அவனுக்குப் பயனென்றும் கிடடவில்லை. அவன் ஏழ்மையை நோக்கி அவன் வரைந்த அந்தச் சித்திரங்களே எள்ளி நகையாடின. தன் கலையும் மதிப்பற்றுத் தானும் வளமற்று இருப்பதை எண்ணி எண்ணி நொந்த அவனுள்ளம் இத் துன்ப உலகிலிருந்து விடுதலை பெறத் துடித்தது.

இப்படி அவன் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது அவன் வாழ்வில் ஓர் புத்தொளி பிறந்தது. வறுமையெனும் ஆழமான ஆற்றில் மூழ்கிக் கொண்டிருந்த அவன் தன்னை ஒருவர் வாழ்வில் கரையேற்றி விடுவதாக உணர்ந்தான்.

திடீரென்று ஒருநாள் ஆழ்வார்குடி, மிராசுதார் நாகலிங்கம அவனைக் கூப்பிட்டனுப்பினார், அவரும் அவர் மனைவியும திருமணம் செய்து கொடுக்கவேண்டிய பருவத்தில் உள்ள தம் ஒரே மகள் லலிதாவை அவள் மாமியார் வீடு போகு முன்னரே படம் எழுதி வைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினார்கள். வெற்றிகரமாகப் படம் எழுதி முடித்தால் ராஜுவுக்குத் தகுந்த பரிசளிப்பதாக மிராசுதார் உறுதி கூறினார்.

ஃ

ராஜு தனக்கெதிரே வீற்றிருந்த இளமங்கையைக் கண்களால் ஆராய்ந்தான். தூரிகை பிடித்திருந்த அவனது வல்க்கை துரிதமாக வேலை செய்துகொண்டிருந்தது. படம் ஏறக்குறைய முடிந்துவிட்டது. அவளுடைய அழகியமுகத்தை அப்படியே உருவாக்கியிருந்தான். திடீரென்று தன் வேலையை நிறுத்திவிட்டு ராஜு லலிதாவை நோக்கி "அசைந்து விட்டீர்களே" என்றான். லலிதாவின் முகம் சிவந்து விட்டது. நெஞ்சு 'பக் பக்' கென்று அடித்துக்கொண்டது. எவ்வளவு நேரம் தான் ஒரு இளைஞனை எதிருக்கெதிராக இருந்து பார்த்துக் கொண்டிருப்பது? அவள் குனிந்து கொண்டாள், "அம்மா! கொஞ்சம் நிமிர்ந்து உட்காருங்கள்" என்று அவன் மீண்டும் வேண்டினான். அவள் சட்டென்று நிமிர்ந்தாள். தன்

கண்மலரில் இரண்டு கரு வண்டுகள் மொய்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். சட்டென்று தலையைத் திருப்பிக் கொண்டு எழுந்து விட்டாள். "ஏன்! ஏன்? எழுந்து விட்டீர்களே!" என்று மென்று விழுங்கினான் ராஜு. அவள் ஒன்றும் பேசவில்லை. "சரி பாக்கியை நாளை முடிக்கலாம்" என்று அவன் எழுந்தான். சென்று கொண்டிருந்த அவனை திரும்பிப் பார்த்தாள். மீண்டும் இரண்டு இணைக்கண்களும் சந்தித்தன. ஆனால் லலிதா மின்னலைப் போல் அப்பொழுதே மறைந்து விட்டாள்.

ஃ

மறுநாள் முடிவுமட்டும் லலிதா ஆடாமல் அசையாமல் இருக்கவே ராஜு மளமள வென்று வேலையை முடித்து விட்டான். வலக்கை விரல்களைத் தீட்டிக் கொண்டிருக்கும் போது ராஜு லலிதாவை நோக்கி,

"அந்த மோதிரத்தைக் கழற்றிச் சிறு விரலில் அணிந்து கொள்ளுங்கள் பார்க்கலாம்" என்றான்.

"ஏன்?" என்ற இன்னிசை லலிதாவின் திருப்பவளச் செவ் வாயினின்றும் வெளிவந்தது.

"கொஞ்சம் அழகைக் கூட்டத்தான்" என்று சுருக்கமாக முடித்தான்.

அதை மறுக்கமுடியாமல் அவள் மோதிரத்தைக் கழற்றிச் சிறு விரலில் அணியப் போகும் போது அது நழுவிக் கீழே விழுந்தது தரையில் உருண்டோடி ராஜுவின் காலில் மோதி நின்றது. ராஜு அதை எடுத்துக் கொண்டு அவளருகில் சென்று அதை நீட்டும் போது அவள் தன் சிறு விரலை நீட்டினாள். அவள் விரலில் அம் மோதிரத்தை ராஜு அணிவித்தான். அப்போது, அவள் உயிரோடு தன் உயிரைப் பிணைப்பது போன்ற உணர்ச்சி! நின்று கொண்டிருந்த அவன் குனிந்தான். உட்கார்ந்திருந்த அவள் நிமிர்ந்தாள்! இன்பக்கூட்டு! 'லலிதா' என்ற மெல்லியசொல் அவன் வாயிற் பிறந்தது. அவன் கைகள் அகன்று விரிந்தன. அதற்குள் அவன் மார்பில் அந்த எழிலரசி தன் முகத்தை ஒட்டிக் கொண்டாள். அப்பொழுது இரண்டு வீணைகள் ஒரே சுதியில் வாசிக்கப்படுவது போல அவர்களின் நெஞ்சமிரண்டும் துடிதுடித்தன. ஆனால் அந்த இன்பத் துடிப்பு அப்பொழுதே துன்பத் துடிப்பாக மாறியது.

"லலிதா!" என்ற கடுமையான குரல் கேட்டு இருவரும் பிரிந்து நின்றார்கள். மிராசுதார் நாகலிங்கம் மீசை துடிக்க, முகத்தில் எள்ளுங் கொள்ளும் வெடிக்க அங்கே நின்று கொண்டிருந்தார்.

இருவருக்கும் நெஞ்சு படபட வென்று அடித்துக் கொண்டது. ராஜு சினந்து விரட்டப்பட்டான். லலிதா தந்தை முன் நிற்க மாட்டாமல் உள்ளே போய்விட்டாள்.

சிறையில் அடைபட்டாற் போல் "பெற்றோரின் கட்டளை"ப்படி தன் அறையிலேயே புழுங்கிக் கொண்டிருந்த லலிதாவின் உள்ளத்தில் பலப் பல எண்ணங்கள் தோன்றி வதை செய்தன. விடிந்தால் இருட்டும் வரை—ஏன், இர

விலுங் கூட—கண்ணீர் வடித்துக்கொண்டிருப்பதைத் தவிர அவளால் வேறென்ன செய்யமுடியும்? ஒரு நாள் தன்ஞல் ஓவியன் ராஜுவுக்கு நேர்ந்த வேதனையை எண்ணிப் புழுங்கிக் கொண்டிருந்தாள். அப்பொழுது அவள் வீட்டு வேலைக்காரி கமலா அன்று இரவு அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் ராஜு அவளைச் சந்திக்கக் காத்திருப்பதாகச் சொல்லச் சொன்ஞனென்று கூறிப் போனுள். சற்று கவலையை மறந்தாள்.

அன்று இரவு யாருக்குந் தெரியாமல் தோட்டத்திற்குள் சென்ற லலிதா ராஜுவைக் கண்டாள். அப்படியே ஓடிப் போய்த் தழுவிக் கொண்டாள். ராஜு தான் ராணுவத்தில் சேர்ந்து பணம் சம்பாதிக்கப் போவதாகவும், பணக்காரனுன பின் தானே நேரில் வந்து அவள் தந்தையைக் கண்டு பெண் கேட்கப் போவதாகவும் ஏதேதோ கதையளந்து கொண்டிருந்தான். உலகானுபவமற்று அவ் விளைஞன் கொட்டித்தள்ளிய பேச்சனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்த பேதை லலிதா ஆறுதல் அடைந்தாள். பின் பிரியா விடை பெற்று இருவரும் பிரிந்தனர்.

ஃ

ராஜு ராணுவத்தில் சேர்ந்து கொண்டான். சாதாரணச் சிப்பாயாகத்தான் சேர்ந்தான். பதவி உயருமென்ற நம்பிக்கையும் பணம் சேரும் என்ற எண்ணமும் பஞ்சாய்ப் பறந்தன. நான்கைந்து மாதங்கள் வரை லலிதாவுக்குத் தன் இன்பக் கனவுகளை எழுதி யனுப்புவான். அவற்ஞெடு படங்களும் வரைந்தனுப்புவான். அவற்றில் ஒன்று லலிதாவும் அவனும் சோலைகளில் கைகோத்துக் கொண்டுபோவதாக இருக்கும். மற்ளென்று வானமண்டலத்தில் இருவரும் இணைந்து பறப்பதாக இருக்கும். இப்படிப் பல! ஆனுல் நாளடைவில் நம்பிக்கையிழந்த ராஜு கடிதம் எழுதுவதைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டே வந்து கடைசியாக எழுதுவதையே நிறுத்தி விட்டான். லலிதா ஒன்றின் பின் ஒன்ருக எழுதிவந்த கடிதங்களையும் படித்துப் பார்த்து விட்டுக் கிழித்தெறிந்து விடுவான். ஒருமுறை, தன் தந்தையார் தனக்குத் திருமணம் நிச்சயித்து விட்டதாகவும், ராஜு வந்து தன்னை ஆட்கொள்ள வேண்டுமென்றும் லலிதா எழுதியிருந்தாள். ராஜு அதைச் சட்டை செய்யவில்லை அடிக்கடி லலிதா எழுதிய உருக்கமான கடிதங்கள் அவன் உள்ளத்தைக் கரைத்தன. ராஜு அவன் வட்டாரத்து மேஜர் கிருஷ்ணசாமியிடம் காயலாய்க் கிடக்கும் தன் பாட்டியைப் பார்த்துவர ஒருமாதம் விடுமுறை தரவேண்டுமென்று எவ்வளவோ கெஞ்சியும் அவன் ஒப்புக் கொள்ளவில்லை. ராஜு லலிதாவை மறந்துவிடுவதொன்றே நல்ல வழியென்றும் அவளாவது பணக்காரன் ஒருவனை மணந்து கொண்டு நன்ருக வாழட்டுமென்றும் எண்ணிப் பேசாமல் இருந்து விட்டான்.

ஃ

நாட்கள் சில கடந்தன. அப்பொழுதுதான் ஒருகடிதம் வந்தது. யாரெழுதியதென்று

மேஜர் சோபாவில் நன்ருகச் சாய்ந்து காலமேல் காலிட்டுக்கொண்டு ஒரு தடவை வாயிலிருந்த சுருட்டை நன்ருக இழுத்து விட்டான். பிறகு, "இப்போது வேண்டு மாஞல் இரண்டு மாத லீவு தரலாம், போய் விட்டு வா ... என்ன சொல்கிருய்?" என்று திடீரென்று அவன் ஒரு வெடிகுண் டைத் தூக்கிப் போடவே ராஜு அதிர்ந்து விட் டான்! அதிர்ச்சி தீர சில விஞடிகள் பிடித்தன. பிறகு என்ன பேசுவ தென்றே யறியா தவனுய், "ரொம்ப தேங்ஸ் ஸார்!" என்ருன். அம் மூன்று வார்த்தை களிலும் அடங் கியிருந்த அவனது நன்றி கிருஷ்ணசா மிக்குப் புலப்படா மல் போகவில்லை.



மேலுறையைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே ஒரு சிப்பாய் ஓடிவந்து மேஜர் அழைப்பதாகச் சொன்னதும் என்னவோ ஏதோவென்று ராஜு மேஜரைப் பார்க்கச் சென்ருன்.

"வா அப்பா! வா, உட்கார்!" என்ற மேஜர் கிருஷ்ணசாமி யின் குரல் என்றுமில்லாதபடி குழைவாக இருந்தது.

"ராஜு! முன்பெல்லாம் அடிக்கடி ஊருக்குப்போக லீவு வேண்டுமென்று கேட்பா யல்லவா?"

"ஆமாம்..." என்று குழறி ஞன் ராஜு வியப்புடன்!

"ஏன் ராஜு, நானும் உன் ஞேடு வந்தாலும் வருவேன்! எனது 'டியூட்டி' இம்மாதத் தோடு முடிந்து விடுகிறது... எனக்கு இனி மிலிட்டரியில் யாதொரு வேலையுமில்லை. நான் ஜீவனத்திற்காக மிலிட்டரியில் சேரவில்லை பார்... ஏதோ ஒரு ஆசை விழுந்து விட்டது. சேர்ந்தேன் அவ்வளவுதான்... ஹி...ஹி...ஹி...!" என்று தன் கோரப்பற்களைக் காட்டிச் சிரித் தான் அவன். ராஜுவுக்கு அவனது பேச்சு உள்ளத்தைப் புண்படுத்தியது. மேஜர் தன் னைப் போல் ஏழையில்லை. அவன் பணக்காரன். பொழுது போக்காகப் பட்டாளத்தில்

சேர்ந்தவன். அத்துடன் வேறோர் உண்மையும் அவனுக்குப் பளிச்சென்று உதயமாயிற்று. இப்போது தனக்கு அவன் விடுமுறை தருவதன் நோக்கமே அவனுடைய சுயநலத்தைக் கருதியே தான்! அவனது மூட்டை முடிச்சுக்களைத் தூக்கவும், அடிமை போல் பணிவிடைபுரியவும் வழித்துணைக்கு ஓர் ஆள் தேவையல்லவா? தன்னை



-வதற்குக் கருவியாக உபயோகிக்கத் துணிந்து விட்டான்! என்ன உலகம்!!

ராஜு-வின் முகம் சிவந்தது. பழைய பகைமை கொழுந்து விட்டெரிந்தது. ஆனால் தன் எஜமானுகிய அம்மேஜரை அவனால் என்ன செய்ய முடியும்? அவனது சிந்தனையைக் குறுக்கிட்டது கிருஷ்ணசாமியின் குரல்.

“என்ன யோஜனை ராஜு?”

“இல்லை...உங்கள் சொந்த ஊர் எது? எதுவரைக்கும் தாங்கள் போகவேண்டும்?”

“எனக்குச் சொந்த ஊர் மெட்ராஸ்... இம்மாதக் கடைசியில் விவாகம் நடக்கவிருக்

கிறது. அதனுல் தான் முக்கிய மாகப் போகிறேன்!''

ராஜு அவனை வியப்புடன் நோக்கினுன். மேஜருக்கு நாற்பது வயதுக்கு மேலிருக்க வேண்டும். மணமானவனென்று இதுகாறும எண்ணியிருந்தான் ராஜு!

''உண்மையாகவா...? நான் நினைக்கவேயில்லை... கல்யாணமானவரென்றே தங்களைத் தவருக நான் எண்ணிவிட்டேன்!''

''ஒரு வகையில் அதுவும் உண்மைதான். முதல் மனைவி இறந்து விட்டாள். ஆனுல் குழந்தைகளில்லை...இது இரண்டாவது தாரம்!''

''ஓஹோ!''

''பெண் வீட்டார் நல்ல பணக்காரர். ஒரே மகள் தான். வலிய வந்த இந்த நல்ல வரன் கைநழுவிவிடக் கூடாதே யென்று எனக்கு ஒரே ஆத்திரம்! பெண்ணும் நல்ல அழகாம்...ஏன்...? உனக்குத் தெரியாமலிருக்காதே......? பெண்ணின் தந்தை உங்களூர் மிராசுதார் தானே!''

''என்ன?லலிதாவா?'' ராஜுவின் தலை சுழன்றது. படாரென்று தன் தலையில் ஒரு ''பாம்'' விழுந்து வெடித்திருந்தால் கூட ராஜு இவ்வளவு திடுக்கிட்டிருக்க மாட்டான்...' ஒரே வினுடியில் அவன் முகம் சவம் போல் வெளுத்து விட்டது. இருதயமே நின்று விட்டாற்போலிருந்தது. நாவு கட்டப்பட்டுவிட்டது. அசையாத கற்சிலைபோல் திறந்த கண்ணை மூடாது மேஜரை விழித்துப் பார்த்தான். அவனது நிலைமையை மேஜர் புரிந்துகொள்ளவில்லை. புன்னகையுடன்,

''என்ன...? அவளை உமக்கு அறிமுகமா?'' என்று கேட்டான். ராஜு திடுக்கிட்டு அசைந்தான்.

''இல்லை!'' என்ருன் ஒரே வார்த்தையில்!

●

வானத்தில் முழுமதி பவனி வந்து கொண்டிருந்தது. மேஜர் கிருஷ்ணசாமிக்கு தூக்கம் கொள்ளாததால் எழுந்து வெளியே வந்தான். கைகளைப் பின்னுல் சேர்த்துக் கட்டிக் கொண்டு நிலவின் அழகை அனுபவித்த வண்ணம் அசைவற்று நின்ருன்.

''மேஜர் ஸார்!''

கிருஷ்ணசாமி திடுக்கிட்டுத் திரும்பினுன். அங்கே ராஜு நின்று கொண்டிருந்தான். ஏனே மேஜரின் மார்பு படபடத்தது! ராஜுவின் சிவந்த கண்கள் அவனைப் பயமுறுத்தின. அவனது கையில் பளபளவென்று மின்னிக்கொண்டிருந்த பிச்சுவாக்கத்தி மேஜரின் ரத்தத்தைச் சில்லிடச் செய்தது. பேச நா எழவில்லை.

திடுக்கிட்டுப் பின்னே சென்றவன், ''என்ன இது ராஜு...? எங்கே வந்தாய்...? என்ன வேண்டும்...?'' என்று திணறினுன். ராஜு சிரித்தான். அவனது பற்கள் நிலவொளியில் வெண்முத்துக்கள் போல் பிரகாசித்தன.

''மேஜர்! எனக்கு லீவு வேண்டியதில்லை. நான் ஊருக்குப் போகவில்லை... நீயும் போகப் போகிறதில்லை... அதைச் சொல்லவே வந்தேன்!''

ராஜுவின் குரலில் ஒலித்த பயங்கரம் தைரிய நெஞ்சம் படைத்த மேஜரைச் சிறு

பையனைப்போல் பயந்து குன்ற வைத்தது. அவனது நெற்றியில் பெரிய பெரிய வியர்வைத் துளிகள் துளிர்த்தன. "ராஜு...! நீ என்ன சொல்கிறாய்?"

"ஊருக்குப் பயணம் போவதை நிறுத்திக்கொள்!" என்று உறுமினான் ராஜு கத்தியை ஓங்கிக்கொண்டே.

"ராஜு! ராஜு! ஒன்றும் செய்யாதே. நில்!"

"முட்டாள்! இரையவா செய்கிறாய்?" ராஜுவின் கத்தி மேஜரின் மார்பில் ஆழமாகப் பதிந்தது. "ஐயோ!" என்று பயங்கரமாக அலறிய கிருஷ்ணசாமி மறு விநாடி 'படா'ரென்று தரையில் வீழ்ந்தான். ரத்தம் குபுகுபுவென்று பெருகி ஆறாகப் பாய்ந்தது. அக்கோரக்காட்சியைக் காணச் சகியாதவன் போல் சந்திரன் ஒரு மேகத்திடையே மறைந்தான். ராஜு குனிந்து கத்தியைப் பிடுங்கினான். அதை மூடியிருந்த ரத்தத்தை வழித்துவிட்டு ஜேபிக்குள் போட்டுக் கொண்டான். வெற்றியின் சின்னம் முகத்தில் நர்த்தனம் புரியக் கூடாரத்தை நோக்கி விரைந்தான்.

சிப்பாய்களனைவரும் அயர்ந்த நித்திரையிலாழ்ந்திருந்தனர். ஓரிரண்டு பேர் விளக்கைப் பாதி தூண்டி வைத்துக்கொண்டு அரைத் தூக்கத்தில் மூழ்கியிருந்தனர். ராஜு விறு விறுவென்று நடந்து தனது கட்டிலில் சென்று தொப்பென்று உட்கார்ந்தான். தன் செய்கையைக் குறித்து அவன் அணுவளவேனும் வருந்தியதாகத் தெரியவில்லை. எதிர்காலத்தைப் பற்றி அவன் கவலைப்படவில்லை!

எவ்விதமாவது இரவைக் கழிக்க வேண்டுமேயென்று எண்ணிய அவன் மனத்தில் சட்டென்று அன்று பிற்பகல் தனக்கு வந்த கடிதத்தின் நினைவு எழுந்தது. தனக்கேற்பட்ட குழப்பத்தில் அதன் நினைப்பே அவனுக்கு வரவில்லை! சட்டைப்பைக்குள் மறந்துபோய் அப்படியே போட்டுவிட அக்கடிதத்தை வெளியிலெடுத்தான்—எப்படியாவது இரவைக் கழிக்க வேண்டுமல்லவா? விளக்கைத் தூண்டி வைத்துவிட்டுக் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தான்.

கவனமாகப் படித்துக் கொண்டே வந்தவன் ஏதோ ஒரு குறிப்பிட்ட கட்டத்தை யடைந்ததும் பயங்கரமாகத் திடுக்கிட்டான். கைகள் நடுங்கின. முகம் சவம் போல் வெளுத்தது. கண்கள் இருண்டன, நெஞ்சு வேகமாக அடித்தது. விளக்கை நன்றாகத் தூண்டிவிட்டு மீண்டும் அதைப் படித்தான்.

"......அடபாவி... நீயல்லவா அவள் வாழ்க்கையைப் பாழாக்கி விட்டாய்...? சௌக்யமாக விருப்பதாக ஒரு வார்த்தை எழுதியிருப்பாயானால் அவள் கதி இவ்வாறு முடிந்திருக்குமா? நீ இறந்துவிட்டதாகவே அவள் தீர்மானித்து விட்டாள்...கமலா எவ்வளவோ தேற்றியும் செவி

சாய்க்கவில்லை... இன்று காலையில்... மனமுடைந்த அவள் வைரத்தைப் பொடித்துத் தின்று தற்கொலை புரிந்து கொண்டாள் உனக்கு அவள் எழுதிவைத்துள்ள கடிதத்தைப் படித்தால் கல்லும் கனியும். நீ பட்ட கஷ்டத்திற்கும் அவமானத்திற்கும் அவளே காரணமென்றும், அவளாலேயே நீ போருக்குச் சென்று மாண்டு விட்டதாகவும் அதைத்தன்னால் தாங்க முடியாதென்றும் இன்னும் என்னென்னவோ! மாப்பிள்ளை வீட்டாருக்குத் தகவல் அறிவிக்கவில்லை "

ராஜுவின் கையிலிருந்த கடிதம் நழுவிக் கீழே வீழ்ந்தது. லலிதா போய்விட்டாள் ! கற்சிலைபோல் அசையாது உட்கார்ந்திருந்தான் அவன்! கண்களில் உயிர் இல்லை. என்ன மடத்தனம்! அறிவீனம்! மத்தியானம் வந்த கடிதத்தை அப்பொழுதே படித்துவிட்டிருந்தால் மேஜரைக் கொலைசெய்து விட்டிருப்பானா அவன்!

தான் இரண்டு உயிர்களைக் கொன்ற கொலைபாதகனென்ற உண்மை அவனுக்குப் புலனாயிற்று!

லலிதா எங்கே? போய்விட்டாள்—அவளுக்காகத் தன்னைத் தியாகம்செய்ய எண்ணியது என்னாயிற்று? கலையையும் காதலையும் ஒன்றாக இழந்தான் அவன்!

ராஜுவிற்கு வெறிபிடித்தாற் போலிருந்தது. சட்டென்று எழுந்தான். பைக்குள்ளிருந்த கத்தியை வெளியிலெடுத்தான். இடது கையைத் தலைமயிருக்குள் புகுத்திப் பற்றிக்கொண்டு ஒரு பயங்கரமானக் கோரச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே கத்தியைத் தரையில் வீசி எறிந்தான்.

கத்திஎழுப்பிய 'டணார்'என்ற ஒலியும் அவன் எழுப்பிய சிரிப்பின் எதிரொலியும தூங்கிக்கொண்டிருந்த சோல்ஜர்களை எழுப்பி விட்டது. தலைவிரிகோலத்துடன் நின்று கொண்டிருந்த ராஜுவையும் ரத்தம் தோய்ந்த பிச்சுவாவையும் மாறி மாறி நோக்கினர். இரண்டுபேர் வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்து ராஜுவைப் பிடித்துக் கொண்டனர். மற்றவர்கள் ஒருவர்பின் ஒருவராக எழுந்து அவனைச் சூழ்ந்துகொண்டனர்.

ராஜு அலறிக்கொண்டே தன்னை விடுவிக்க முயன்றான். "ராஜு ராஜு இதென்ன?" என்று மாறிமாறிக் கேட்டனர் திகைப்படைந்த சோல்ஜர்கள்.

"மேஜரைக் கொன்று விட்டேன்! அதோ பிச்சுவா, அதைக் கொண்டுதான் கொன்றேன்! என்னை விடுங்கள், விடுங்கள்! லலிதா அழைக்கிறாள். லலிதா! லலிதா!" என்று அரற்றிய ராஜு திமிறிக்கொண்டு தன்னை விடுவித்துக் கொண்டு தொப்பென்று தரையில் நினைவற்று வீழ்ந்தான்!

புரட்சிக் கவிஞரின் புதிய நூற்கள்

காதலா கடமையா?

நாட்டுக்கு விடுதலை நல்குவதாக வந்த மன்னன், மக்கள் தலைவன் மகிணனின் காதலி கிள்ளையைக் கண்டு காமுறுகிறான். கிள்ளையைத் தந்தால் விடுதலை கிடைக்குமெனக் கூறுகிறான். விடுதலையை மறுப்பதா, காதலை மறப்பதா என்ற சிந்தனையிற் சிக்கிய மகிணன் கடைசியில் கிள்ளையைத் துயிலும் போது கொன்றுவிட முயல்கிறான். விழித்தெழுந்த கிள்ளை அன்புமிக்க அவனால் தன்னைக்கொல்ல இயலாமை கண்டு தானே தன்னை வாளால் வெட்டிக்கொள்ள முயன்றாள். அப்போது அவளை நேரிற் கண்டு கெஞ்சவந்த மன்னன் தடுத்து நாட்டுக்கு விடுதலை நல்குகிறான். இது கதை. காவியத்தை எளிதில் சுவைப்பதற்காகக் கதைச் சுருக்கமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. கவியரசரின் கவிதைச் சிறப்பு இக்காவியம் முழுவதும் நிறைந்துள்ளது. ஒரு பல்லில்லாத கிழவி வெற்றிலையிடிக்கையில் "விடுதலைச் செய்தி விளம்புதல் கேட்டதால் தடதட என்றே இடிபட்டது கல்" என்று கூறும்போது கவியரசர் விடுதலையால் வரும் உயிராற்றலைப் புலப்படுத்தி விடுகிறார். தங்கவேல், மன்னனை மணக்குமாறு கிள்ளையை வேண்டி நிற்க, அவள் பூவிழியில் நெருப்புப் பொறி பறக்கத் "தங்கவேல் என்னும் தமிழனைக் காண்கிலேன், இங்கொரு கோழையை யான் காண்கின்றேன்" என்றுரைக்கும் போது உரிமையுணர்வு நம் நெஞ்சில் முளைவிடுகிறது. விடுதலை கிடைத்த பின், ஆளுக்கொரு வீடும் நிலமும் ஏரும் தொழிலும் அரசியலார் தருவதாக மகிணன் கூறியதும் அவற்றைப் பெற விழைந்த அவனுடைய தாய் அங்கு போய் வருவதற்குக் கட்டிக்கொள்ள ஓர் நல்ல உடை இல்லையே என்று வருந்தும் நகைச்சுவைக் காட்சியின் மூலம் அடிமை நாட்டின் அவலநிலையைக் காட்டிக் காவியத்தை முடித்துவிடுகிறார் ஆசிரியர். இது பாண்டியன் பரிசுக்கடுத்தபடியாக வந்துள்ள சிறந்த காவியம். பிறமொழி கலவாத இனிக்கும் தமிழில் இயன்றுள்ளது. விலை ரூ. 1—4—0

கடல் மேற் குமிழிகள்

சாதிச் செருக்கையும், மேட்டுக்குடியினரின் செல்வச்

செருக்கையும் அடக்கி மக்கள் குடியாட்சி ஏற்படுத்துவதாகக் கதை. இக் காவியத்தைக் கவியரசர் புதிய முறையில் அமைத்துத் தந்துள்ளார். ஒவ்வொரு பகுதியும் அகவலில் தொடங்கி, விருத்தம், வெண்பா அல்லது கண்ணிகளாக மாறிவிடுகின்றன. அரண்மனையில் வேலை செய்யும் அனைவரும் வேலை நிறுத்தம் செய்தபின் அங்குள்ள பார்ப்பனரை வேலைகள் அனைத்தும் பார்த்திடவேண்டுமென அரசன் ஆணையிட, "அடட்டா செருப்புத் துடைப்பது முதல் அடுப்புத் தொழில் வரை அனைத்தும் நடத்துவோம்" என்று கூறுகின்றனர். மேலும் "புல்லேந்து கையில் வில்லேந்துவோம் யாம்" என்று கூறி அரசனை மயக்குகின்றனர். வேளைவந்ததும் மன்னர்க்குச் செல்வாக்கில்லாத போது "நாங்கள் என்ன செய்ய முடியும்"? என்று கைவிட்டு விடுகின்றனர். இந்நிகழ்ச்சிகள் இந்நாள் பார்ப்பனரின் ஏலாப் பேச்சை எள்ளிநகையாடும் பகுதிகள். "நேற்றுப் புலித்திறல் சோற்றையுண்ட சிறுமதிப் பார்ப்பனர் நிறைநீர்க் குடத்தோடும்" பெருநாட்டு மன்னனை வரவேற்றல் அவர்களின் வழிவழியாய் வந்த காட்டிக் கொடுக்கும் தன்மையைக் காட்டுகின்றது. இக்காவியத்தில் வரும் காவற்காரன் மகன் அழகனும் பூக்காரி மகள் மின்னொளியும் கதை நிகழ்ச்சிக்குத் தேவையான குறிப்பிடத்தக்க உறுப்பினர்கள். கருத்துக்குச் சுவையூட்டும் நிகழ்ச்சிகள் நிறைந்த காவியம்.

விலை 12 அணா.

திருமணம்

குடும்ப விளக்கின் முதற் பகுதியாக இல்லத்தலைவியின் ஒரு நாட் கடமையைச் சித்தரித்த கவியரசர், இரண்டாம் பகுதியாக விருந்தோம்பு முறையை விளக்கினார். இப்பொழுது மூன்றும் பகுதியாகத் திருமணங்காணும் முறையை வெளியிட்டுள்ளார். ஒரு சிறு குறையால் மனம் வெறுப்புற்றிருந்த மணமக்களின் தந்தையர் இருவரும் மணமக்கள் ஒருவரையொருவர் மணக்க விரும்பிய செய்தி கேட்டதும் தங்கள் பழைய சண்டையை மறந்து ஒன்று கூடுவதும், மணமக்கள் ஒப்பந்தம் உடைப்பதும், மணம ஆனவுடன் தனியில்லத்துட் சேர்வதும் இந்நாள் தமிழர்க்கேற்ற முறையெனக் கவியரசர் கூறுகிறார். அவர் காட்டும் சிறந்த பாதையில் தமிழ் மக்கள் செல்ல வேண்டியது இன்றியமையாததாகும்.

விலை 10 அணா

இருண்ட வீடு

கோபக்காரத் தலைவன், கல்வியறிவில்லாத தலைவி, சந்தர்ப்ப மறியாத குழந்தை, ஒழுங்கற்ற வேலைக்காரர்கள் நிறைந்த சோம்பேறிக் குடும்பத்தின் ஒரு நாள் நடைமுறையை விளக்கும் இந்நூலில் கவியரசர் வரிக்குவரி நகைச்சுவையை ஏற்றி வைத்துள்ளார். கண்ணில் தட்டுப்பட்ட கைத்துப்பாக்கியை எடுத்துத் தலைவன் திருடனை மிரட்டும்போது பையன், 'அது பொய்த்துப்பாக்கி' என்று கூவும் நிகழ்ச்சியைக் கவியரசர்

கூறும்போது பையன் அறியாமையை நினைக்க ஒருபுறம் வெறுப்பும் ஒருபுறம் சிரிப்பும் உண்டாகிறது. இதுபோன்ற வேடிக்கை நிகழ்ச்சிகள் மிகுதி. இப்புத்தகம் இப்பொழுது மூன்றாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. விலை 10 அணா.

அகத்தியர் விட்ட புதுக்கரடி

அகத்தியக் குள்ளன் ஆரியக் கொள்கையை மெல்ல மெல்லத் தமிழகத்தில் புகுத்திய வரலாற்றைக் கவியரசர் கூறுகிறார். தமிழ் நூற்களைக் கொளுத்தக் காரணமான அகத்தியனை, தமிழ் வளர்த்தானென்று நம்பி அறிவையடகு வைப்போர் இந்நூலைப் படித்துத் தெளிவடைதல் வேண்டும். இத்துடன் 'நல்ல முத்துக் கதை' என்ற ஒரு கதை இணைக்கப்பட்டுள்ளது. தந்தை சொன்னதற்கெல்லாம் 'ஆமாம்' போடும் பையன் ஒருவன் திராவிடக் கழகத்தில் சேர்ந்ததும் தன்மான உணர்வு பெற்றுத் தன் வாழ்வைத் தானே வகுக்கமுற்படும் கதை இது. தமிழர்க்குணர்வு தருவது. விலை 4 அணா.

இந்தி எதிர்ப்புப் பாட்டு

'எப்பக்கம் வந்து புகுந்துவிடும்-இந்தி எத்தனை பட்டாளம் கூட்டிவரும்' என்று கேட்டுக் 'குமுறும் தமிழ்க்கடலே இந்தி கொணரும் பகைமேல் எழுவாய்' என்று ஆணையிட்டு 'வருமொழியாம் இந்தியையும் வடநாட்டார் ஆட்சியையும் ஒருநாளும் ஒப்போமென்றதிராயோ முரசே!' என்று முரசு கொட்டிக் 'கட்டாய இந்தியை வெட்டிப் புதைப்போம்' என்று முழக்கி வீரஞ்சேர்க்கும்



குருக்கள்: ஏங்காணும், ஜமீன் ஒழிந்துபோச்சே! உம் ஜமீன்தார் இனி உம்மைக் கணக்கு வேலைக்கு வச்சுக்குவனோ?

கணக்கர்: பரவாயில்லைங்காணும்! மனுஷாளுக்கு அடிமையாயிருந்தது தீர்ந்தது! பாரதியார்சொல்லியிருக்கிறபடி நானும் உம்மைப்போலப் 'பரிபூரணனுக்கே அடிமை செய்து' வாழ்ந்தால் போகுது!

பாடல்களை இத் தொகுப்பில் கவியரசர் நமக்களித்துள்ளார். விலை 4 அணா

திராவிடர் திருப்பாடல்

தொண்டர்கள் பிரசாரம் செய்வதற்கெனக் காலையிலும் இரவிலும் பாடும்படியாகக் காலைப்பத்து இராப்பத்து என இருபது பாடல்களும் விடுதலைப் பாட்டு என்ற நொண்டிச் சிந்தொன்றும் படுவாய்க் கண்ணி பதின்மூன்றும் இத் தொகுப்பில் உள்ளன. அனைத்திலும் கவியரசரின் கவிநயம் இடையூடிக் கிடக்கின்றது. விலை 4 அணா

— நா. வேத்தரசன்

சிலப்பதிகாரக் காட்சிகள்

விசு. திருநாவுக்கரசு

4. காதலர் பிரிவு


நெய்தல் நிலம். கடல்சார்ந்த பக்கமெல்லாம் இயற்கை அன்னையின் களிநடனம். புன்னை மரத்தின் அருகே ஏக்கமே வடிவாய்த் தலைவி அமர்ந்திருக்கிறாள். காதலனைப்பிரிந்த துன்பம் உள்ளத்திலே பெருகிப் பொங்குகிறது. அதை வெளிப்படுத்தினாலன்றி அவளுக்குத் துன்பம் குறையாது போலத் தோன்றியது. 'சொல்லத் தொலையும் துன்பம்' என்பதை அவள் நினைத்தபோது தோழியிடம் சொல்ல நாணமாயிருந்தது. எனவே அந்த எண்ணத்தை விட்டுவிடுகிறாள். உயிருக்கு உயிரான தோழியிடமே சொல்ல முடியாத ஒன்றை வேறு யாரிடம் சொல்லமுடியும் என்று ஒரு கணம் அவள் நினைத்துப் பார்த்தபோது, உள்ளமே வெடித்துவிடும்போல் இருந்தது. சொல்ல முடியாமலும், உள்ளத்திலே இனி வளரவிட முடியாமலும் வந்த காதல் நோய் தணிவதாயில்லை.

இவ்வாறு துயர்ப்படும் தலைவிமார், ஞாயிறை நோக்கியும், திங்களை விளித்தும், கடலையும் கானலையும் கூவியும் விலங்குகளையும், மரங்களையும் பார்த்தும், பொழுதையும் புட்களையும் அழைத்தும் தாம் படும் துன்பத்தைச் சொல்லி ஆறுதல் பெறுவதுண்டு. அவ்வாறே தலைவி தன் அருகே காண நிற்கும் அன்னத்தை நோக்குகிறாள். "குதிரை பூட்டிய தேரிலே வந்து கருணை காட்டிய தலைவர் நம்மை மறந்துவிட்டார் போலும். அவர் மறந்தாலும் மறக்கட்டும். அன்னங்களே! பூங்கொடிகளே! நம்மை அவர் மறந்தாலும் நாம் அவரை எப்படி மறக்க முடியும்!"

தம்முடைய தண்ணளியும் தாமுந்தம்
மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரோ
விட்டகல்க
அம்மென் இணர அடும்புகாள்
அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாமறக்க
மாட்டேமால்

ஆசைமுகம் மறக்க அவளால் ஆவதில்லை. புரிந்த காதலும், காட்டிய கருணையும் நினைவிலே எழுந்து மறையாது நிற்கின்றன. கடந்த நாட்களில் காதலர் உண்டு

வழங்கிய இன்பங்கள் நினைவுத் திரையிலே ஓடோடி வந்து மறைகின்றன. அன்னங்களையும் பூங்கொடிகளையும் தன்னோடு சேர்த்துக்கொண்டு நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டோம் என்கிறாள் தலைவி. தானும் தலைவனும் துய்த்த இன்பம் மிகுதற்குக் காரணமான இடத்தையும் அங்குள்ள அன்னம பூங்கொடி முதலிய பொருள்களையும் அவன் மறந்துவிட்டதை நினைந்து வருந்துகிறாள். நன்றி மறவாத ஒரு நற்பண்பு, தன்னிடத்தே மட்டுமன்றி தன்னைச் சார்ந்துள்ள பொருள்களிடத்தும் அக்குணம் சார்ந்துள்ளது என்பதை 'நாமறக்கமாட்டோம்' என்ற சொற்களில் தான் அவள் எவ்வளவு அழுத்தமாய் வெளியிடுகிறாள்: அதே சமயத்தில் தலைவனிடம் அப்பண்பு இல்லாமையைச் சொல்லாமல் சொல்லிவிடுகிறாள் அல்லவா? மையுண்ட தன் கண்களைப்போல் மலர்ந்துள்ள நெய்தல் மலர்களைப் பார்க்கிறாள். நீண்ட தன் கண்ணுக்கும் நெய்தல் மலருக்கும நிறத்தால்வந்த தொடர்பை ஒருகணம் நினைத்துப்பார்க்கிறாள்: "ஆ! எத்தனை நெருங்கிய ஒற்றுமை. செவ்வரி படர்ந்த என் கண்களைச் சிவந்த நிறக் கீற்றுகள் பரவியுள்ள நெய்தலில் காணுகிறேன்" எனப்பேசுகிறாள். மற்றொரு கணம்: "மலர்ந்த என் கண்களோ மலர்ந்த வண்ணம் நீரைச்சொரிகின்றன. காலையில் மலர்ந்த நெய்தல் மாலையில் அயர்ந்து குவிகிறது. நிறத்தால் ஒன்றுபட்டநெய்தல்செயலால் மாறுபடுகிறதே!" எனக் கூறுகிறாள். மாலைப் பொழுதிலே காதலன் பிரிவால் தான் கண்ணுறங்காது வருந்த நெய்தல் துன்பமறியாது தூங்கிவிடுகிறதாம். நனவில் காண முடியாத காதலரைக் கண்ணுறங்கினாலல்லவோ கனவிலாவது காணலாம்! அவள்மனம் போன வழியிலே கண் போக மறுக்கிறது. "நீகண்ணயர்ந்து கண்ட கனவிலாவது என் காதலரைக் கண்டாயா?" என்று நெய்தலை நோக்கிக் கேட்கிறாள். துன்பம்மிகுந்து போனதால் தலைவிக்குத் தூக்கம் வரவில்லை. கண்ணாலும் கனவாலும் காதலனை அவளால்காண முடியவில்லை. கனவில் மற்றவர் கண்டதாய்ச் சொன்னாலும் அவளுக்குத் துன்பம் குறைந்துவிடும் போலும்! தலைவன் வாராதுபோன நிலையை நினைத்



தால் அவளுக்குக்கோபம் கோ பமாய் வருகிறது. அதனால் 'வன்கணர்' (கொடுமையாளர்) என்கின்றாள். சினத்திலும 'காதலன்' என்றஆசைஎழுந்து 'வன்கணன்' என்றுகூறவிரும் பாது'வன்கணர்' என்று சொல்லவைத்துவிடுகிறது

புல்கண்கூர் மாலைப் புலம்புமென்
கண்ணேபோல்
துன்பம் உழவாய் துயிலப்
பெறுதியால்
இன்கள்வாய் நெய்தால் நீயெய்துங்
கனவினுள்
வன்கணர் கானல் வரக்கண்
டறிதியோ!

காதலர் சென்ற திசையைப் பார்க்கிறாள். ஒரே ஆகாய வெளியாய்த் தெரிகிறது. தேர் போன வழியைப் பார்க்கிறாள். வெறிச்சென்று காணப்படுகி றது. தேர்க்கால் படிந்த தடத்தைப் பார்க்கிறாள். தடம் மறைந்துவிட்டது. கடல் அலை கள் அழித்துவிட்டன. அதைக்கண்டு அவள் மனம் அந்தக் கடலைப் போலவே பொங்குகிறது. "பழி தூற் றும் உறவினர் போல, அலை கடலே! இந்தச் செயலைச் செய்துவிட்டு என்னருகே நீயு மிருக்கிறாய்! அவர் பிரிந்து சென்றபோது இச் செயல் அடாது என்று நீ தடுக்க வில்லையே! சோலைகளே! அன் னங்களே! நீங்களும் இது கூடாது என்று கூறவில் லையே!"

நேர்ந்தநங் காதலர் நேமி
நெடுந்திண்தேர்
ஊர்ந்த வழிசிதைய ஊர்கின்ற
வோதமே
பூந்தண் பொழிலே புணர்ந்தாடும்
அன்னமே
ஈர்ந்தண் துறையே இதுதகா(து)
என்னீரே!

அலை கடலையும், மலர்ச் சோலையையும் மகிழ்ந்தாடும அன்னங்களையும், தண்ணிய நீர்த் துறையையும் நோக்கிக் கூறுகிறாள். அவன் தேர் முத லில் கடற்கரையையும், பிறகு சோலையையும், அன்னங்கள உறைகின்ற நீர்த் துறைகளை யும் கடந்து சென்றது என் பதை வரிசைபபடுததுகிறாள். ஒவ்வொன்றையும் கடந்து அவன் போகும்போது ஏதா வது ஒன்று தடுத்திருக்க வேண்டும் என்பது அவள் உள்ளார்ந்த எண்ணம்.

'பிரிவு' என்ற சொல்லை அவள் சொல்லவும் அஞ்சுகி றாள். 'இது' என்ற சொல் லால் உணர்த்துகிறாள். சொல் லையே பொறுக்காத உள்ளம் அச்செயலை எவ்வாறு பொறுத்திருக்குமோ என் பதை அறிய நம் சிந்தனைக்கு ஆசிரியர் விட்டுவிடுகிறார்.

"காலிலேபட்ட முள்ளைத் தன் கண்ணிலே பட்டதாய் நினைக்கும் அன்னை இத் துன் பத்தை அறிந்து விட்டால் நான் என்ன செய்வேன்?" என்று சொல்லிப் புலம்புகி றாள். பொழுதும் சாய்ந்துவிடு கிறது. பிரிவுத் துன்பம் பின் னும் பெருகிவிடுகிறது; அவள் மன நிலையை அறிந்து வரு கின்ற தோழி அருகே இருக்கி றாள்; தலைவியின் உள்ளம பல வாறு தன் துயரை நினைத்து ஆராயத் தொடங்கியது. "மாலைப் பொழுது தனக்குத் துன்பமானால் அவருக்கும துன்பமாக வேண்டும். துன்ப

மாஞல் அதைப் போக்க என்னை நினைத்து அவர் ஓடோடி வரவேண்டுமே! அவரோ வருவதாயில்லையே! அதனுல் அவர் நாட்டில் மாலைப பொழுது தோன்று வதே இல்லையோ—என்னவோ எதற்கும் தோழியைக் கேட்க லாம்'' என்று முடிவுசெய்கிருள்.

கதிரவன் மறைந்தனனே
காரிருள் பரந்ததுவே
எதிர்மலர் புரையுண்கண்
எவ்வநீ(ர்) உகுத்தனவே
புதுமதி புரைமுகத்தாய்
போனர்நாட்(டு)உளதாங்கொல்
மதியுமிழ்ந்து கதிர்விழுங்கி
வந்தஇம் மருள்மாலை

''பகற் பொழுதிலே தாங்க வொண்ணுத துன்பத்தை இராப்பொழுதிலே எங்ஙனம பொறுத்திருப்பேன்! சந்திரனை உமிழவும், சூரியனை விழுங்கவும் முடியுமானல் அந்தச் சக்தி வாய்ந்த மாலைப்பொழுதின் முன்னிலையிலே என்னல் யாது செய்ய முடியும்? அவர் வருகை புரிந்தால் மாலைப் பொழுதைப் பார்த்து நகையாடலாம். இல்லையானல் துன்பத்தைப் பொறுப்பதல்லாமல் எதிர்ப் பது எவ்வாறு?'' என்றெல் லாம் எண்ணி எண்ணிக் கண் ணீர் வடிக்கிருள். 'மறைந்த னனே! பரந்ததுவே! உகுத் தனவே!' என முடியும் அவள் சொற்களிலே அவள் உள்ளத் தில் பரவிப பொங்கும் சோகம் அழுத்தமாய்ப் பேசுகிறது.

தனக்கு வந்த துயரைத் துடைப்பார் யாருமில்லாத காரணத்தால் கண்முன்னே, காணும் இயற்கைப் பொருள் களிலெல்லாம் வெறுப்படைகி ருள். நெய்தற் சோலையிலே மாலைப் பொழுதினிலே சிறகு வீசி வரும் நாரைகளைப் பார்க் கிருள். சினம்பெருகி விடு கிறது. ''நாரைகளே இங்கே வந்து இனித்' தங்காதிர்கள், நன்றிகெட்ட நாரைகள் நீங்கள். காதலரிடத்து நானடையும் துன்பத்தை எடுத்துச் சொல் லத் தவறி விட்டீர்கள். நீங்கள் இங்கே வராதிர்கள்''

அடையல் குருகே அடையலெங் கானல்
அடையல் குருகே அடையலெங் கானல்
உடைதிரைநீர்ச் சேர்ப்பற்(கு)உறுநோய் உரையாய்
அடையல் குருகே அடையலெங் கானல்

'எம் கானல்' என்று தன் னுரிமை தோன்றவும் 'அடை யல்' என்று பலமுறை கூறுவ திலும் அவள் உள்ளுணர்ச்சி நன்கு வெளிப்படுகிறது.

இத்தகைய காதற்பாடல் களை மாதவி யாழிலே மீட் டித் தானும் பாடினுள். தன்னை நீக்கித் தலைவனெருவனை மனங் கொண்டு வஞ்சனையாகப் பாடி னுள் என எண்ணினுன் கோவ லன். அவள் பாடப்பாட, அவன் உள்ளத்தில் வளர்ந்த மாதவி காதல், சினமாய் மாறி, பிரிவாகிய அமைதியிலே முற்று மழிந்து விடுகிறது. யாழி சைப் பாட்டிலே ஊழ்வினை உருவெடுத்துவந்த காரணத் தால் மாதவியின் தளிர்மேனி யில் பொருந்திய கோவலன் கை நெகிழ்ந்தது. 'பொழுது கழிந்தது போகலாம்' என்ற சொல் கோவலனிடமிருந்து வெளிவர மாதவியை விட்டுப் பிரிந்து விடுகிருன்.



விளம்பர மோசடி

சுகி

தினக்கென வாழாப் பெருந்தகையாளர்கள், இந்த உலகில் பல வடிவத்தில் காட்சி தருவார்கள். விளம்பர மருந்துக்குள் இவர்கள் புகுந்து தலை நீட்டுவது இயல்பு. இந்த விளம்பரத்தை நீங்கள் படித்திருந்தால், உலகத்தை ஏமாற்றி எவ்வளவு சுலபமாகச் சம்பாதிக்கலாம என்ற வித்தையை அறிய முடியும்.

"நான் வைத்தியனோ, பைத்தியனோ அல்ல. வெகு காலத்திற்கு முன் வாலிபனாக இருந்தேன்; தறுதலையாக அலைந்து வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டுத் தற்கொலை புரிய ஹிமாசலம் நாடினேன். அங்கே பனிப் பாறையிலிருந்து தலை குப்புற விழ இருந்தபோது, ஒரு மஹாத்துமா (பக்கிரி) என்னைத் தடுத்தாட்கொண்டு, எனது விரக்திக்குக் காரணம் கோரினார். உடனே இரு மருந்துகள் உள்ளுக்கும் வெளிப்பூச்சுக்கும் கொடுத்தார். உண்டேன்; உணர்வு பெற்றேன்; தளர்ந்த நரம்புகள் தடித்தன; முறுக்கேறின. நின்ற இரத்த ஓட்டம் குதிப்பெடுத்தது. பைய நகர்ந்தது, பாய்ந்தது.

"அருமையான வாசக நண்பர்காள்! இது பொய்யன்று; உண்மை. என் உடம்பிலே ரத்தம் மட்டுமல்ல, சதையும் துடித்தது. உடல் கூறுபாடுகள் இளமையடைந்தன. நான் வாலிபனானேன். என்னால், அரைப் பூரியும் கால் உருளைக் கிழங்கும் சாப்பிட முடியாமல் இருந்தது. இப்போது பூரிகளையும் உருளைக் கிழங்குகளையும் கணக்கின்றி உணபதுபழக்கம்; பால் படிக் கணக்கில் குடிக்கிறேன். நம்பிக்கையில்லையா? நேரில் வந்து பரீட்சை செய்யுங்கள்;

"அந்தப் பக்கிரி இனமாக வழங்கிய மருந்து மூலிகைகளைக் கண்டது முதல் என் உடல் பொருள் ஆவி மூன்றையும் மனித சமூகத்திற்கு அர்ப்பணம் செய்யக் கங்கணம் கட்டி விட்டேன். அவர் காட்டிய மூலிகைகளிலிருந்து மருந்து செய்து வியாபார நோக்கத்தோடு இல்லாமல்-பரோபகார எண்ணத்



தோடு வழங்க முன் வந்துள்ளேன்.

"நானாக இந்தத் தயாளநோக்கத்திற்கு வரவில்லை. என்னைப் போல் இளமை இழந்த வாலிபர்களை நட்புக் காரணமாகச் சிகித்சை செய்ய, அவர்கள் என்னை இத் தொண்டில் ஈடுபடும்படி செய்தார்கள். தபால் கட்டணத்திற்கும், மூலிகை ஹிமாசலத்திலிருந்து வந்து சேருகிற ரயில் பஸ் சார்ஜ் வகையில் ஏதோ ஒரு மண்டலத்திற்கு ரூ. 50/- மட்டும் என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

"இந்த விளம்பரத்தின் நோக்கம் வியாபாரம் அன்று. உங்கள் திருப்தி உய்வு, இது தான் எனது குறி......"

இப்படியாகக் கதையளந்து விட்டு தமது மருந்தினால் குணப்பட்ட மன்மத புருஷர்களில் நற்சாட்சிப் பத்திரங்களுடன் (நல்ல வேளை படங்கள் இல்லை) அரைப் பக்கத்தில் ஒரு பத்திரிகையில் விளம்பரம் செய்திருந்தார்.

இந்த விளம்பரச் சரக்கில் உண்மை இருக்கிறதா என்று கண்டு பிடிக்கப் படிக்கணக்கான பசும் பாலையும் தட்டுக்கணக்கான பூரியும். அண்டாக் கணக்காக உருளைக் கிழங்கும் கொண்டு போய்த் தரிசிக்க வேண்டுமா? இப்படியும் பக்கிரிகள், சாதுக்கள், வேறு வேலையின்றி இமயத்தில் தற்கொலை புரியவரும் இளைஞர்கள் (தோற்றத்தில் கிழ்வர்கள்) உய்யத் தவங் கிடக்கிறார்களா?

என் சந்தேகங்கள் வலுப் பெறுமுன் அதே புண்ணிய



வான் மறுநாள் இன்னொரு விதமாக விளம்பரம் செய்தார்.

"எனது குருநாதர் இந்தப் பச்சிலையைச் சுட்டிக் காட்டிப் பக்குவ மார்க்கங்கள் சொன்ன போது நான் நம்பவில்லை. மருந்தைத் தயார் செய்த பிறகு என் கண்ணில் பட்ட ஒரு வயோதிகர்வயசு84, அவருக்குக் கொடுத்தேன். அவர் பெயர் மிங்கியா மின் யெங். மறு நாள் உடம்பின் சுருக்கங்கள் மறைந்தன. கட்டுமஸ்தான உடல், கன்னச் சுருக்கங்கள் எப்படியோ மறைந்து மழ மழவென மாம்பழக் கதுப்பு போல் ஆகி விட்டன. அவருக்கு வயசு 33 ஆகி விட்டது. மறுதார மணம் செய்ய வேண்டுமென்றார். நடந்தது. இன்னும் அவர் மிச்சிங் எச்சிங் என்ற கிராமத்தில் ஆறு குழந்தைகளுடன் இளமையோடு இருக்கிறார்.

"அவர் மட்டுமா? ஆப்பிரிக்காவிலுள்ள டாங்கனிக்கா, ஓமல் குமான் என்ன, நார்வே நாட்டு சுக்கிரிபா என்ன, ஜப்பானிய சிக்கிசுக்கு ஊ என்ன, நியூஜிலெண்டு கண்ட மின் வென்ட் என்ன, இவர்கள்



எல்லோரும் நமது நற்சாட்சிக்கு இலக்கியமாக இருக்கிறார்கள்.

"நமது நாட்டில் மாஜி மந்திரிகள், மாஜி திவான்கள், மாஜி கவர்னர்கள்——— பெயர்கள் (எமது ஆபீஸ் பைல் வந்து பார்க்கவும்) மாபெரும் ஸ்தாபனங்கள், இயக்கங்கள் எல்லாரும் எமது மருந்தையே உட்கொண்டு முன்னணியில் நிற்கிறார்கள்.

"சந்தேகமிருந்தால் எமது முதுமை கொல்லியை வாங்கிச் சாப்பிட்டு நாற்பத்தி ஓராவது நாள் எழுதுக——"

என் சந்தேகம் வலுத்தது. உண்மையாக இல்லாவிட்டால் படே படே நபர்கள் வாங்குவார்களா? மகாராஜாக்கள், மாஜி திவான்கள், மாபெரும ஸ்தாபனப் பெரியவர்கள் உண்டதும், உய்வடைந்ததும் கனவா? பத்தி பத்தியாக ஆங்கிலத்திலும் தமிழிலும், இந்த விளம்பரம் வருவது பல வருஷங்களாக இருக்கிறதே. என் சந்தேகம் — நம்பிக்கையான பாதையில் போயிற்று.

சில நாள் சென்றபின் அந்த மருந்தின் கூட்டு ரகஸ்யத்தைப் புண்ணியவான் விளம்பரப்படுத்தியிருந்தார்.

"100 தோலா துருப்பிடித்த இரும்புத் துகள், புங்கம்பட்டை 12 சேர், நீர்யானைக் கொம்பு 3, மான் கோரோஜனை அரை வீசை; மாட்டுக் கஸ்தூரி ஒரு துலாம்; இதை அக்னி திராவகத்தில் கொதிக்க வைக்க, கிடாரிக்கன்னு விராட்டியில் எரிக்க வேணடும். வடிகட்டி, ஆறு காலன் பாலில் மீண்டும் கொதித்து வஸ்திர காயம் செய்துவிட வேண்டும். இதைப் பூமிக்குள் ஆறுமாதம் குடத்தில் போட்டு வைத்திருந்து, மீண்டும் பாலில் கொதிக்க வைத்து வஸ்திர காரம் செய்து மண்ணிற்குள் புதைக்க. நான்கு முறை இதைச் செய்துவிட்ட பிறகு பதினறடி வேங்கைக்கு முன்னால் காட்டினலும் வேங்கை மூர்ச்சையாகும். இந்தப் பஸ்பத்தைப் பஞ்ச பஞ்ச உஷத் காலத்தில் மூக்கைப் பிடித்துக் கொண்டு தெற்கு நோக்கித் தேனில் குழப்பிச் சாப்பிட—— விரும்பும் பலன் கிடைக்கும்."

என்ன தைரியம்; எவ்வளவு மனத் துணிச்சல்! போதாக் குறைக்கு இந்த மருந்தைத் தேனில் குழைத்தோ பாலில் போட்டோ சாப்பிட மறந்து விட்ட காரணத்தால், அந்த நபர் வைத்திருந்த கண்ணாடிப் பாத்திரம் இறுகிக் கட்டியாகி உடையவே இல்லையாம். கண்

மலர் மணம்

நாங்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த பொன்னி பொங்கல் மலர் இன்று கிடைக்கப்பெற்று உளம் பூரித்தோம். ஆங்கில ஆதிக்கத்தினின்று விடுபட்ட தமிழகத்தின் இரண்டாம் பொங்கல் நாளில்-தமிழரது நல்வாழ்க்கை தொடங்கும் ஆண்டின் முதல் நாளாக அமையும் பொங்கல் பெரு நாளில்-பொன்னி பொங்கல் மலராகத் தமிழர் கையில் எழில் பெறக் காட்சி தந்து இன்புறும் படிச் செய்த, அதன் ஆசிரியர் அவர்களையும் பொறுப்பாளர்களையும் வாழ்த்துகின்றோம். தமிழர் தம் நிலை உயரவும், தமிழர் வாழ்வு விடுதலை பெற்று விளக்க முறவும், ஆவன செய்யும் வகையில் பொன்னி இதுவரையும் தொண்டாற்றி வந்திருப்பதை அன்பர்கள் நன்கறிவார்கள். பொங்கல் மலரிலும் அழகிய படங்களோடு கூடிய எழுத்தோவியங்களும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும், ஆக்க வேலைக்கமைந்த அரிய கருத்துரைகளும் கவிகளும் வெளிவந்துள்ளன. ஆகவே தமிழர் இதனை விரும்பி ஏற்று இன்புறுவார்கள் என்பது திண்ணம்.

டர்பன் } ச. மு. பிள்ளை.
8-3-49 } மு. வ. பத்தர்.

தென்னாப்பிரிக்கா தமிழர் சங்கம்


ணாடி அந்த மருந்தின் ஸ்பரிசத்தால் இந்த வலுவடைந்தால், உடல் அந்த மருந்தின் ஊட்டத்தால், எவ்வளவு, வலுவடையும்!

அடடா, மனித சமுதாயத்தின்மீது எவ்வளவு கருணை இரக்கம், அன்பு! எலும்புந் தோலுமாக நெஞ்சு கூடுகட்டி இருக்கிற பேர்வழி, கொஞ்ச ரூபாயில் மன்மதனாக மாற ஆசைப்படுகிறான். பட்டுப் போன்ற உடல், பவள உதடு: ஒளி கக்கும் கன்னம்; அறிவுச் சுடர் தெறிக்கும் கண்கள்; சுருள் சுருளாகத் தொங்கும் மயிர்க் கற்றைகள். இன்னும் என்னவெல்லாம் ஆகலாம்.

நான் சொல்வது மிகையாகப் படுகிறதா? இல்லவே இல்லை. இளமையில் மோகங் கொண்ட அப்பாவிகளை வலையில் இழுக்க இதைவிட நூறு மடங்கு பச்சைப் பொய்களை, நம்பும் தொனியில் வெளியிடுகிறார்கள். என்னைப் போன்றவர்கள், ஏன் நம்மைப்போன்றவர்கள் சிரிக்கிறோம்!

நம்பினவர்கள் பணத்தைக் கொடுத்து அழுகிறார்கள்.

இதுதான் வித்தியாசம்.



புது எழுத்தாளர்கள்



-நா. வேத்தரசன்-

11. எளிய நடை

எளிய நடைபற்றி இன்றைய புதுமலர்ச்சி எழுத்தாளர்களும், பண்டிதர்களும் கூறி வரும் கருத்துக்கள் குழப்பத்தை யுண்டாக்கி வருகின்றன. ஒரு எழுத்தாளர் "மக்கள் பேசும் மொழியிலேயே எழுதப்பட வேண்டும்; அது தான் படியாத பாமரரும் இன்னொருவர் படிக்கக் கேட்டால் புரிந்துகொள்ள வாய்ப்புத் தரும்" என்று கூறுவர். பெரும்பாலும் இந்த எழுத்தாளர் கதை எழுதுபவராகத்தான் இருக்கவேண்டும் என்று கருதலாம். ஏனெனில் கட்டுரைகள் என்பவை பாமரருக்குச் சொன்னாலும் புரியாத ஒரு எழுத்துக் கூட்டம் என்று கருதுபவராகத்தான் இந்த வகை எழுத்தாளர் இருப்பார்.

ஒரு சிலர் கதையுறுப்பினர்களைப் பேசவிடும்போது மட்டும் கொச்சை மொழிகளைக் கையாண்டு, ஆசிரியர் கதை கூறும்போது செவ்விய தமிழிலேயே எழுதவேண்டுமெனக் கூறுவர். இது யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய கருத்தே.

சில சமயங்களில், கையாளப்படும் கொச்சை மொழி, புதியவொரு மொழியாகத் தோன்றும். இதற்குக் காரணம், ஆங்காங்குள்ள மக்களின் பேச்சு வழக்கெல்லாம் தனித்தனிப் பண்பாடுற்று விளங்குவதே யாகும். எனவே கதையுறுப்பினர்களைப் பேச விடும்போது எல்லா இடங்களிலும் உள்ள தமிழர்க்கும் புரியுமா என்பதையும் சிந்தித்து முடிவு கட்டிக்கொள்ளவேண்டும்.

பண்டிதர்களோ, தமக்குப் புரியுமளவு தமிழ் இருந்துவிட்டால் உடனே அதை எளிய நடை யென்று கூறத் தயங்குவதில்லை. புலவர்கள் 'எளிய நடை'யென்று ஏற்றிப்புகழ்ந்து போற்றும் நூல்களெல்லாம் பல்லைத்தட்டும் சொல் நிறைந்த கோவை யாயிருப்பதைக் கண்டிருக்கிறோம். சில பண்டிதர்கள், அவர்கள் கற்ற அளவுக்கு நடையில் கடுமை இல்லையெனில் அதைக் கொச்சை நடையென்று கூறி வெறுத்தொதுக்கி விடுவார்கள்.

இக்காலப் பத்திரிகையாசிரியரில் பலர் நூற்றுக்கைம்பது வடமொழிச் சொற்கள்வரை கலவாத தமிழ் நூற்களைக் கடுந்தமிழ் நூற்கள் என்றே வீம்புக்காகக் கூறிவருகின்றனர். காதற்கதை எழுதும் பல எழுத்தாளர்களும் இப்படிக் கூறுவதற்குச் சளைப்பதில்லை. தனித் தமிழில் எளிய நடையில் ஒரு நூல் இயன்றிருந்தாலும் அதைக் கடுநடையென்றே கூறும் இவர்கள்

நெஞ்சுத் துணிவு நேர்மை யானதன்று.

ஓசைப் பாடல்களினாலும் விருத்தங்களினாலும் வடமொழி கலந்து இயன்ற பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தை ஏற்றிப் புகழும் அதே ஆட்கள் தனித் தமிழில் எண்சீர் விருத்தங்களில் இயன்ற பாரதிதாசனின் பாண்டியன் பரிசைப்பற்றிக் கூறும்போது 'நடை கடுமையாக இருக்கிறது' என்று குறிப்பிடுகின்றனர். ஆனால் பஃறொடை வெண்பாவில் இயன்ற பாரதியாரின் 'குயில்' இவர்களுக்கு எளிய நடையாகத்தான படுகிறது. இதற்குக் காரணம் ஒன்று கட்சி வேறுபாடு கண்ணை மறைத்திருக்கவேண்டும், அல்லது தங்களால் தனித் தமிழில் எழுத முடியவில்லையே என்ற ஏலாமை நினைப்புப் பொறுமையை யெழுப்பிவிட்டிருக்க வேண்டும்.

இந்த ஆட்கள் இலக்கணம் பார்த்துக்கொண்டு எழுதுவதால்தான் நடை கடுமையடைகிறது என்று கூறுகிறார்கள். இப்படிக் கூறுவதற்குக் காரணம் என்னவென்பதே எனக்குப் புரியவில்லை. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் ஒன்றாக முடிச்சுப் போடுவதுபோல இலக்கணத்துடன் மொழியின் தன்மையைச் சம்பந்தப்படுத்திப் பேசும்போது, அறியாமல் பேசுகிறார்களா, அல்லது அறியாமையை வளர்க்கிறார்களா, அதனால்நன்மைகள் விளையுமென்றுகருதுகிறார்களா, என்பது புரியவில்லை.

இலக்கணத்தால் சொற்களைச் செட்டாகப் பயன்படுத்தும் இயல்பு உண்டாகுமே தவிர, எளிமையும் கடுமையும் நடையில் ஏற்றுவது எழுத்தாளனின் கைத்திறமையென்பதை யுணரவேண்டும். அண்ணாவின் உரைநடையழகையும் அதில் உணர்வெழுப்பும் வகையில் வந்துவிழும் எதுகை மோனைகளையும், அதைப் பொது மக்கள் போற்றிப் புகழ்வதையும், அவர்போல் எழுத முயலும் இளைஞர்களையும கண்டு கண்டு, நமக்கிந்த புகழில்லையே என்று நொந்து நொந்து நைந்த சிலர் இது வெறும் 'பிராச' நடை, உயிரற்ற நடை யெனறு கதைக்கிறார்கள். எதுகையும் மோனையும் வந்துவிட்டதாலேயே நடையைக் கடியதென்றும புரியாததென்றும் எளிதாகக் கூறிவிடலாமென்று இவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் அண்ணாவின் நடையைக் குறை கூறும் பண்டிதர்கள் இது தமிழ்மரபு பிறழ்ந்தது என்று கூறுகிறார்கள். இந்த இரு கூட்டத்தாரின் போக்கும் எப்படியிருக்கிறது?

இப்படியெல்லாம், ஒவ்வொருவரும் கூறும் கருத்துக்கள் புதிதாகப் பேனாப் பிடிக்கும் இளைஞர்களைத் திகைக்கச் செய்துவிடுகின்றன. எப்படி எழுதுவது, எது எளிமையென்றறியாமல் அவர்கள் குழம்பிபபோக நேரிடுகிறது என்பதற்காகத்தான் இத்தனையும் எடுத்துக் காட்டினேன்.

எளியநடை கடியநடை என்பதெல்லாம் ஒவ்வொருவரின் 'சொற்றொடர் அமைக்குந் திறமை'யைப் பொறுத்திருக்கிறது. ஒருவர் கடுந் தமிழில் இயன்ற நூல்களிலேயே அவற்றின் பொருட் சிறபபு கருதி ஈடுபட்டுப் படிக்கிறாரென்றால் இயல்பாக அவருடைய நடை

கடுமையாகிறது. எளிய நூற்களையே பொழுது போக்க விரும்பி அவற்றில் ஈடுபட்டுப் படிப்பவர் எழுதும்போது எளியநடையில் எளிதாக எழுதி விடுகிறார். இவ்வாறு பழக்கத்தால் நடையின் தன்மை யமைவதும் உண்டு.

கல்லாதவர்க்கும் புரியும்படியாக நான் எழுதுகிறேன் என்று கொச்சை நடையில் எழுதிக்கொண்டு வந்தால், கல்லாதவர்கள் கற்றுத் தேற வேண்டிய தேவையில்லை என்ற நிலை தானாக வந்தமைவது இயல்பு. எழுதப் படிக்கத் தெரியாமலிருக்கும்போதே எல்லாம் தெரிந்தவனாக ஒருவனிருக்க முடிந்தால் அது அவனுக்குக் கிடைத்தற்கரிய பேறுதானே! அவன் வீணாகப் படித்துக் காலத்தைக் கழிக்கத் தேவையில்லையே என்ற எண்ணமும் தோன்றிவிட்டால் எழுத்து மொழி தேவையற்றதாகிப் பேச்சு மொழி மட்டுமே நிற்கும். இந்த நிலையில் மொழி வந்துநிற்க வேண்டுமென்று எவரும் விரும்ப மாட்டார்கள். எனவே படித்தவர்கட்கெல்லாம் புரியும் எளிய நடையில் செவ்விய தமிழில்எழுத முயல்வதே எழுதத் தொடங்குவோரின் எண்ணமாக இருக்கவேண்டியது இன்றியமையாதது.

12. முடிவுரை

ஒரு கட்டுரைக்கோ, கதைக்கோ அழகுகொடுப்பதில் அவற்றிற்குக்கொடுக்கும் தலைப்புக்களே முதன்மையானவையாகும். பார்த்ததும் படிக்கத் தூண்டும் முறையில் தலைப்புக்கள் இருக்கவேண்டும். எடுத்துக்காட்டாகப் 'புது எழுத்தாளர்கள்' என்று நான் கொடுத்திருக்கும் தலைப்பு எழுதத் துடிக்கும் இளைஞர்களையெல்லாம் என் கட்டுரையைப் படிக்கத் தூண்டுகிறதல்லவா?

கதை எழுதுவதில் 'கதையமைப்பு' நன்றாக இருக்க வேண்டியது இன்றியமையாதது. கதையமைப்பு என்றால் கதையின் நிகழ்ச்சித்தொகுப்பு என்று கொள்ளலாம். அடுத்தபடியாக அன்பைப பற்றிக் கூறும் இடங்களில் அமையும் சொற்றொடர்கள் தேன்பாய்ச் சுவனவாகவும், இடத்திற்குத் தகுந்தபடி பயம், கோபம் முதலிய உணர்ச்சிகளைப் படிப்பவர் மனத்திலும் உண்டாக்கும்படியாகவும், அடுத்து வருவது என்ன என்ற விழைவைத் தருவதாகவும் எழுதிக்கொண்டு போகவேண்டும். கதையை முடிக்கும் இடம் படிப்பவரின் நெஞ்சில் நிலைபெறும் கட்டமாக இருக்க வேண்டும். முடிவாகநீங்கள்எழுதும் பொருள் பற்றிய உங்கள் நினைப்புஅத்தனையும் படிப்பவர் புரிந்துகொள்ளக் கூடியமுறையில் சுருக்கமாக இருக்கவேண்டும். மக்கள் ஏற்கும் முறையில் சிலர் எழுதக் கிளம்பியிருப்பது போல் இராமல் நாம் எழுதுவதை மக்கள் ஏற்கிறார்கள் என்ற நிலை வரும்அளவு கதை கட்டுரைகள் எழுத வேண்டும். எல்லோரும் போகின்ற வழியில் போகிறவனைவிடத் தனிவழி கடைப் பிடிப்பவன் தான் மக்கள் பார்வைக்காளாகிறான். அப்பாதையில்சென்று வெற்றியடைந்தால் அவனைப் போற்றிப் புகழ்வதுடன் அவனை பின்பற்றும் சமுதாயம் ஒன்றும் உண்டாகி விடுகிறது.

பொது மேடை

நாகபட்டணம் 14-3-49

தங்களின் பொன்னி இதழும் பரிசளிப்பு நூல்களும் கிடைக்கப் பெற்று மகிழ்ந்தேன். மாணவர் மன்றம் தோற்றுவித்து மாணவர்களாகிய எங்களை ஊக்குவிக்கும் தங்களுக்கு எனது நன்றி உரித்தாகுக.

இரா. சவுந்தரராசன்.

கூடலூர் 14-3-49

தமிழர் இல்லந்தோறும் இலக்கிய மணம் மட்டுமல்ல, புதுமைக் கருத்து மணமும் கமழச் செய்யும், மூன்றாவது ஆண்டு 'பொன்னி' இதழ்களை எவரும் பாராட்டாமலிரார். கம்பச்சித்திரங்களும், கம்பன் காட்சிகளும் நடமாடும் நாட்டிலே சிலப்பதிகாரக் காட்சியின் மூலம் சிலம்பொலிக்கச் செய்த பெரும் பேறு தங்கட்கே உரித்தாகும். தன்மானம் தழைத்தோங்கும் தமிழகத்தில், மாணவரை மதியாது மந்த மதியினர் உலவும் இந்நாளில் தாங்கள் துணிந்து வெளியிடும்—மாணவமணிகளுக்கு-அறிவு விளக்கந்தரும் மாணவர் மன்றம் மதிப்பிடவொண்ணதது. இனவுணர்வு கொண்ட இளம் எழுத்தாளர்களுக்குத் தோழர் வேத்தரசன் அவர்கள் அளிக்கும் நுணுக்கமான விளக்கங்கள் என் போன்றார்க்கு உறு துணையாக அமைந்து புற்றீசலெனப் புதுமை எழுத்தாளர்கள் தோன்றுவது, புத்துலகம் காண விழையும் இளம் எழுத்தாளரைப் புறக்கணிக்கும் புல்லர் கூட்டத்திற்கு அடிக்கும் சாவுமணியாகும்! நகைச்சுவைப் பகுதி, சாத்திர, சம்பிரதாயங்களுக்குச்சமாதிகட்டும் பெரும் பணியை மேற்கொண்டிருப்பது, தமிழர் அனைவராலும் போற்றப்படக் கூடியதாகும். தமிழனுடைய கலைக்கும், கலாச்சாரத்திற்கும், மொழிக்கும், மொழிவழி வாழ்க்கைக்கும், பழம்பெருமை வாய்ந்த பண்டைத் தமிழனின் பண்பாட்டிற்கும் தமிழகக் கவிக்குயில்கள் போற்றி வளர்த்த காதல் வாழ்வுக்கும், கயமையே உருக்கொண்ட கசடர்களால் ஊறுநேரா வண்ணம் பாதுகாப்பது இலக்கியப் பூங்காவனப் 'பொன்னி' யின் பெருந்தொண்டாகும்.

க. தியாகராசன்.

சென்னை 15-3-49

தமிழில் மலராக வெளிவருவனவற்றுள் 'பொன்னி' பொங்கல் மலர் முதலிடம் பெற்றது, என்று அதைப்படிக்கும் ஒவ்வொரு தமிழரும் பெருமையுடன் கூறுவர். மலரில் ஒருகட்டுரையைப் படிக்குங்கால் மறுகட்டுரையைப் படிக்கும்படி மனத்தை அழைத்துச் செல்லும் தன்மையில் மலர் தொகுக்கப் பட்டுள்ளது, வியத்தற்குரியதே. கண்கவரும்; உள்ளத்திற்கு இன்பம் ஊட்டும் எழில்மிகு ஓவியங்கள் கருத்துக்குகந்த காதல்கட்டுரைகள் மடமையை நீக்கி மதியை வளர்க்கும் கட்டுரைகள். 'பொன்னி' பொங்கல் மலரை நறுமணம் வீசும் நல்லமலராக்கி விட்டன. சுருங்கக் கூறின் உள்ளத்தில் உள்ள இருளை நீக்கி, அங்கு ஒளிபரவும் வகையில் மலரின் கட்டுரைகள் உள்ளன.

மு. திருநாவுக்கரசு.

குருநாக்கல் இலங்கை 8-3-49

பொன்னி பொங்கல் மலர் வந்ததும் வராததுமாய் எங்கெங்கோ போய்ப் போய் வந்தது. கலையை உண்மையில் கருத்துடன் உணர்பவர்கள்தான் கவலையுடன் 'பொன்னி' மலரை என்னைப் பரிதவிக்க விட்டு விட்டு வாங்கி வாங்கிப் போனார்கள். இந்த ஊரில் கருத்துக்கு, கலைக்கு இருப்பிடமான பத்திரிகைகளுக்கு 'ஏஜண்ட்' இல்லாமையால் எனது பொங்கல் மலர் போய்வரட்டும் என்னும் விருப்பமுடன் நண்பர்களுக்கு விட்டுக் கொடுத்தேன். நண்பர்களைக் கேட்டேன் "பொன்னி பொங்கல் மலர் 1949 ஐப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?" என்று. "தன் கற்பை அடகு வைக்காத, இளமங்கை, அழகிலும், அறிவிலும், ஆற்றலிலும் முதன்மையானவளை ஓர் உண்மை மகன் என்ன சொல்லுவானோ அதே அபிப்பிராயம்தான் பொன்னி பொங்கல் மலர்க்கும் சொல்லுவோம். அந்த அறிவியக்க நூல்களுக்கும் சேர்த்துச் சொல்லும்வோம்" என்றார்கள், அது முற்றிலும் உண்மையே.

நா. ராசகோபால்.

பெரியகுளம் 2-3-49

இவ்வாண்டு பொன்னி பொங்கல் மலரைக் கண்ணுற்றேன். தமிழர்களுக்குப் பன்னெடுங் காலத்துக்கு முன்பே இயல் இசை நாடகம் எனும் முத்தமிழும் உண்டு என்று பெருமிதத்துடன் கூறுவது போலிருக்கிறது. மலரின் அட்டைப் படம்—மாதவி நடனம். மலரிலுள்ள ஒவ்வொரு சிறுகதையும் விகடத்துணுக்கும் அறிவியல் கட்டுரையும் கண்ணுக்கு விருந்தாக மட்டுமல்ல, கருத்துக்கு விளக்கமாக மட்டுமல்ல, சிந்தனையைக் கிளறும் வரலாறுகள், வர்ணனைகளுடன் பூத்துக் குலுங்குகின்றன. நீன்மானத் தோட்டத்திலே, எங்களால் பயிரிடப்பட்ட செடியின் நறுமணமுள்ள மலர் தான் என்று கூறுவது போல் வீற்றிருக்கிறார்கள் பெரியாரும் அண்ணாவும். சங்கராந்தி பொங்கல் தமிழர் திருநாளாயிற்று தீபாவளி மலர் பொங்கல் மலராயிற்று. மலர்தந்த ஆசிரியர் முயற்சிக்கு என் நன்றி.

ப. கு. இராமசாமி.

நாகூர் 11-3-49

எப்பொழுது கிடைக்கும் என ஏங்கித்தவித்த எனக்கு 'பொன்னி' பொன்னேட்டைப் பார்த்தபோது புத்துணர்ச்சி பொங்கிற்று. படித்து முடிக்கும்வரை மின்சாரம்போன்ற உணர்ச்சி, பெரியாரின் 'மதமும் கடவுளும்', அண்ணாவின் 'வெற்றி கண்ட வேந்தரும்', புரட்சிக்கவிஞரின் பொங்கற்பாட்டும் 'பொன்னி'க்கு ஜீவசக்தி அளிப்பதோடு சுவைக்க, சுவைக்கத் தேனமிர்தமாக திகழ்கின்றன. சிறந்தஎழுத்தாளர்களின் கருத்தோவியங்களும், ஓவியங்களும் அறிவிற்கு விருந்தாகத்திகழ்கின்றன. மொத்தத்தில் இவ்வாண்டு பொன்னி பொங்கல் மலர் திராவிடர் கழக வளர்ச்சியை நிதரிசனமாக நிரூபிக்கிறது. மாற்றுக் கட்சித் தோழர்களும் பார்த்து, படித்து, பரவசமடைவதை பார்க்கும்போது இன்றைய இலக்கியஉலகில் 'பொன்னி' நல்லாள் நோபல் பரிசு' பெறவேண்டியவள் என்பது என் எண்ணம். மற்றையோரை விடத் திராவிடர் கழகத்தினரும் சிறந்த முறையில் மலர் வெளியிட முடியும் என நிரூபித்த 'பொன்னி' ஆசிரியர் முயற்சிக்குத் திராவிடம் மிக மிகக் கடமைப் பட்டுள்ளது.

என். வி. சபாபதி.

வேதாள ரகசியம்

சிப்பி



வீரனும் மணியும் பள்ளிக்கூடம் விட்டு மகிழ்ச்சியுடன் வீடுநோக்கி வந்து கொண்டிருந்தனர்.

வீரன்: நான் வீட்டுக்குப் போனேன்னா, எங்க பாட்டி பலகாரம் கொடுப்பா, தின்பேன். அப்புறம் வேதாளக்கதை சொல்லுவா!

மணி: உனக்குப் பாட்டிமேலே தான் பிரியமா! ஐயோ. எனக்கு எங்கப்பா மேலேதான் பிரியம். போன உடனே மின்சார சக்தியாலே காப்பி போட்டு உடனே குடித்து விட்டு விளையாடப் போயிடுவேன். பாடம் படிக்கும் போது எங்கப்பா மின்சார சக்தியைப் பத்தியெல்லாம் சொல்வாரு!

வீரன்: போடா! எலக்ட்ரிக் எங்கேயும்தான் இருக்கு. சொல்லித்தான் தெரிஞ்சுக்கனுமோ! எங்கப் பாட்டி சொன்னகதை சொல்றேன் கேளு! ஒரு ராஜா காட்டிலே தனியா இருந்தான். அப்ப திடீரென ஒரு வேதாளம் வந்து "நான் புத்திசாலிக்குத் தான் அடங்கி நடப்பேன். எனக்கு நிறைய வேலைகொடு. இல்லேன்னா தின்னுபுடுவே"னுச்சு. உடனே அரசன் ஒரு பெரிய அரண்மனையும் சாப்பாடும் வேண்டுமென்றான். கொடுத்துச்சு. இன்னும் கேட்டதெல்லாம் கொடுத்துச்சு. இன்னும் வேலை கொடுன்னுச்சுப் பூதம். அரசனுக்குச் சங்கடமாப் போச்சு. ஊரிலே உள்ள நாய் வால்களை யெல்லாம் நிமிர்த்துப் புடுன்னான். நிமிர்த்திப் பிட்டுவந்துச்சு வேதாளம். யோசிச்சான் அரசன். சரின்னு, தன் தலையிலே உள்ள ஒரு சுருட்டைமயிரைக்கொடுத்து இதை நிமிர்த்துப்புடுன்னான். அது

இழுத்து இழுத்துப் பார்த்துச்சு. ஊஹூம், முடியலே. இன்னும் சுருள ஆரம்பித்தது. வேதாளம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அடங்கி விட்டது.

மணி: ஊய், இதானே உன்கதை.! இதென்னடா பிரமாதம்! எங்கப்பா மின்சார சக்தியைக்கொண்டே சமைக்கிறதைப் பார்த்தேன், நானும் சமைக்கனும்னு அப்பா வெளியே போயிருந்தப்போ மின்சார அடுப்பைத் திருகிவிட்டேன். அதிலே பாத்திரத்தை வைக்க மறந்துட்டேன். அது கொதிச்சு ஆவியா வந்தது. எனக்கு அதை நிறுத்தத் தெரியலே. உடனே தண்ணியை எடுத்து ஊத்தினேன். உறிஞ்சிடுத்து. காகிதத்தைப் போட்டேன். தலை மயிரைப்போட்டேன். எல்லாந் தீஞ்சு போயிடுச்சு. அடுப்பு பழுக்க ஆரம்பிச்சதும் பயமாப்போச்சு. கத்திவிட்டேன். நல்லவேளை அப்பா வந்து நிறுத்திட்டாரு. அடிப்பாரோன்னு நடுங்கினேன். ஊஹூம். அடிக்கலே. "டே, மணி. மின்சாரத்துக்கு அதிக சக்திஉண்டு. தக்கவேலை கொடுக்கலேன்னு ஆபத்துத்தான். இன்னும் கொஞ்ச நேரம் விட்டிருந்தா வீடே எரிஞ்சிருக்கும். இந்தச் சக்தியாலேமூணு வேளைக்குச் சமைச்சிருப்பேனே.



வீணாக்கி விட்டாயே. உங்க மாமா நிலத்திலே ஒரு பகுதியையேஉழுதிருக்கலாம்டா இந்த சக்தியைக் கொண்டு" அப்படின்னு அப்பா சொன்னார்.

"இவ்வளவு சீக்கிரமாகவா உழுதிடலா"ம்ன்னு கேட்டேன்.



"ஆமா உழுவதென்ன விதைக்கலாம் களையெடுக்கலாம், பயிரை அறுவடை செய்யலா"ன்னார் 'பின்னே! ஏப்பா அந்த நிலத்தைச் சும்மா போட்டிருக்கார் மாமா' என்று கேட்டேன்.

"இயந்திரங்களே கூடாதுன்னுட்டு உங்க மாமா ராட்டினத்திலே நூல் நூற்பதைப் பார்த்தா தெரியலையா? இவன்தான் நிலத்தை இப்படி விளக்கப் போருனுக்கும்!" என்று என் தகப்பனுர் பதில் சொன்னுர்.

ஆச்சரியத்துடன் வீரன்கேட்டான் "எலக்ட்ரிக் சக்தியாயிருந்தாலும் நம்ம முயற்சி பண்ணினுத்தானே இப்படி விளைவிக்கலாம். வேதாளம்னு நம்ம நினைச்ச உடனே விளைவிச்சுப் பயிராகக் கொண்டாந்துடும். சமைச்சுக்கூடப் போட்டுடும். எதுடா தேவலாம்" என்று.

மணி: அதையே தாண்டா நான் எங்கப்பாகிட்டே கேட்டேன், உடனே எங்கப்பா "வேதாளங்கிறதெல்லாம் பொய்தம்பி. 'ஐயோ! சீக்கிரம்விளைவிக்கிராப்லே ஒரு சக்தியிருக்கக் கூடாதான்னு ஏங்கியவுங்க' எழுதிவச்சதுதான் வேதாளக் கற்பனே. ஆனு மின்சாரசக்தி அப்படி இல்லே. கொஞ்சம் சிரமப்பட்டா நல்லாப் பயன்தரும். ஏண்டா மணி! கனவிலே கண்ட கற்கண்டு தேவலையா, கையிலே கிடைக்கிற கரும்பு தேவலையான்னு" எங்கப்பா கேட்டார்ரா. நீ என்னடா பதில் சொல்லுவே!

வீரன்: "போடா, இதோ எங்கவீடு வந்துடுச்சு" என்று கூறி வீரன் தன் வீட்டுக்குள் ஓடி விட்டான்.

மாணவர் மன்றம்

கேள்வி 2. விடைகள்

டி. எஸ். எம். அபூபக்கர்,
VI படிவம், சாஃப்பள்ளர்
உயர்நிலைப்பள்ளி, திருநெல்வேலி.
(பரிசு பெற்றவர்)

சமுதாயத்தின் நடைமுறையிலே நேர்மைக்கு உண்மையில் மதிப்பு உண்டு. நேர்மை இருவகை; ஒன்று உண்மையான நேர்மை, மற்றது நடிப்பு. சமுதாயம் சில நாட்கள் வரை நடிப்பை நேர்மையென எண்ணிப் போற்றுகிறது. தூய்மையான நேர்மையை இகழவும் எதிர்க்கவும் செய்கிறது. சீர்கெட்ட இச்செயலால் இன்று கூட நாசகாரக் கும்பல்களுக்கு வயிறு வளர்க்க வசதியாகிவிட்டது. ஆனால் ஆண்டுகள் செல்லச் செல்லச் சமுதாயம் நேர்மையை அறிந்து போற்றிப் பயன் பெறுவது திண்ணம்.

●

அ. கல்யாணி,
IV படிவம், சபர்பன்
உயர்நிலைப்பள்ளி, கோயம்புத்தூர்.

நேர்மை உரைத்த குறளை மறைத்து நய வஞ்சகத்தின் இருப்பிடமான மனுவுக்கு முதலிடம் கொடுத்த அன்றே நேர்மை பொய்மையாக்கப்பட்டது. தற்காலத்தில் நேர்மையை மேற்கொண்ட எண்ணற்ற மக்களுக்கு மனுநீதியின் பெயரால் அறிவிலி, கோழை, வஞ்சகர், தீயர், என்ற பட்டங்களை வழங்கிவருகிறார்கள். இத்தகையோர் நிறைந்ததால் நேர்மையாக நடப்பவர் நடைப் பிணமாகத் திரிகின்றனர். மெய்மைக்குப் பொய்மை யென்ற பட்டமும் கிட்டிவிட்டது. மக்களை மாக்களாக்கும் மனுநீதி ஒழிந்தாலன்றி சமுதாயத்திலே மெய்மை ஒரு கைம்மை.

●

நெ. திரு. தர்மலிங்கம்,
VI படிவம், டான்பாஸ்கோ
உயர்நிலைப்பள்ளி, வேலூர்.

சமுதாயத்தில் மேடைகளிலும் பொதுக் கூட்டங்களிலும் நேர்மை மதிக்கப்படுகின்றது; பாராட்டப்படுகின்றது, ஆனால் நடைமுறையில் எங்குமே நேர்மைக்கு முதலிடமளிக்கப்படுவது கிடையாது. ஒருவன் தன்னுடைய எண்ணங்களையோ கருத்துக்களையோ தன்னுடைய மனத்தில் உள்ளபடியே வெளியிடு

வதுதானே நேர்மை. அது ஆண்மையும்கூட. ஆனால் நமது சமுதாயம் இன்று என்ன செய்கின்றது? நேர்மையுடையவனை எள்ளி நகையாடுகின்றதல்லவா? ஏன்? இதன் மூலம் நாம் அறிவதுதான் என்ன? நேர்மைக்குச் சமுதாயத்தின் நடைமுறையிலே மதிப்பு இல்லை என்பதே. காந்தியார் கொல்லப்பட்டதே இதற்கு எடுத்துக் காட்டாக அமையும்.

●

இரா. சவுந்தரராசன்,
IV படிவம்,
தேசியஉயர்நிலைப்பள்ளி,
நாகபட்டணம்.

சமுதாயத்தின் நடைமுறையிலே நேர்மைக்கு மதிப்பில்லை! நேர்மையின் போலித் தோற்றத்திற்குத்தான் மதிப்பு!

சமுதாயம் நேர்மையின் கொலையைப் பாராது! ஆனால் மனிதரின் கொலையை மட்டும் சிரித்துக்கொண்டேபார்க்கும்.

நேர்மையைப்பற்றிப் பிரமாதப் படுத்தும் நம்மைத் தவிர சமுதாயம் ஒரு மனிதனின் வாழ்க்கையில் எவ்வளவு பயங்கரமான துன்பங்கள் மறைந்திருக்கின்றன என்பதை எண்ணிப் பார்ப்பதே யில்லை!

●

ஏ. எம். இராமனுதன்,
VI படிவம்,
தேசிய உயர்நிலைப்பள்ளி,
மன்னார்குடி.

நேர்மை என்பது ஒரு ஒழுங்கு, ஒரு கட்டுப்பாடு இவற்றுக்கு உட்பட்டு நடக்கும் செயல். இந்த நேர்மை, சமுதாயத்தில், காலத்திற்குத் தகுந்த வாறும், அக்கால மக்களின் அறிவு, எண்ணம் இவற்றுக்குத் தகுந்த வாறும் (இது) சமுதாயத்தில் மதிப்புப் பெறும். ஆனால் நடைமுறைச் சமுதாயத்தில் நேர்மைக்கு மதிப்பே கிடையாது.ஏனென்றால், மக்களின் மூட நம்பிக்கையும், கண்மூடிப் பின் பற்றலும்தான் இதற்குக் காரணம். இதனால் நேர்மையாளர்களுக்கும் இந்த ஒழுங்கற்ற மக்களால் இன்னல் ஏற்படுகிறது.

இங்கே கத்தரிக்க

கேள்வி எண் 3

மறுமலர்ச்சி என்றால் என்ன?

— இரா. சவுந்தரராசன், நாகபட்டணம்

விடைகள் கூபனேடுதான் அனுப்ப வேண்டும். அத்துடன் மூன்று புதிய கேள்விகளும் எழுதியனுப்ப வேண்டும். விடை 50 சொற்களில் அடங்குதல் வேண்டும்.

முடிவு நாள் 5—4—49

பெயர்..............................
வகுப்பு..............வயது..........
பள்ளி..............................
ஊர்..............................
தேதி..............கையெழுத்து